விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: பன்னிரண்டு


சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 11 வியாழக்கிழமை (23.02.2006) தொலைபேசி 222 3378 ஒலி 66

# பாலா-நிமால் கைலாகு கொடுத்து பேச்சை நேற்று ஆரம்பித்தனர்!

## இன்று இரண்டாம் நாளும் தொடரும் பேசப்பட்ட விடயம் இன்று இரவு தெரியும்

(ஜெனீவா)

இலங்கையில் எந்நேரமும் முறிந்து போகக் கூடிய நிலையில் இருக்கின்ற யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை காப்பாற்றுவதற்கான இரண்டு நாள் பேச்சுவார்த்தையினை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஜெனீவாவில் நேற்று ஆரம்பித்தனர்.



சுவிஸ்லாந்து ஜெனீவா நகருக்கு அருகே ஷடோதா போஷே என்கின்ற பழங்கால அரண்மையில் மிகுந்த எதிர்பார்ப்புடன் இப் பேச்சுவார்த்தைகள் நேற்று ஆரம்பமாகின. இப் பேச்சுவார்த்தை இரண் டாம் நாளான இன்றும் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. நேற்றும் இன்றும் பேசப்படவுள்ள விடயங்கள் குறித்து இன்றிரவு ஊடகவியலாளர்களுக்கு விளக்கப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலகத்திற்கு முன் ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்

## ரணிலின் அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் சட்டத்திற்கு முரணானது

### செய்தியாளர் மத்தியில் சிறிபால டி சில்வா

(ஜெனீவா)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுக்களில் இதுவொரு முக்கியமான கட்டம்.

அர்த்தமுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையின் அனைத்து இனத்தவருக்குமான பயன் ஏற்படுத்துகிற அடிப்படையில் இப் பேச்சுக்கள் அமைய வேண்டுமென அரச தரப்பின் பிரதம பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பேச்சு ஆரம்பிக்குமுன் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கௌரவமான அமைதி என்ற கொள்கையை முன்வைத்து எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையே கடந்த 2002 ஆம் ஆண்டு எமது அரசியல் யாப்புக்கும் சட்டத்திற்கும் முரணான யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

இது இலங்கைக் குடியரசின் இறையாண்மைக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)





மேஜர் ரோய் கட்டளை அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் மோட்டார் பீரங்கி ஒழுங்கிணைப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார். இந்நிகழ்வில் போராளி ஒருவருக்கு தலைவர் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.

# ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்

(ஜெனீவா)

ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் செயலகத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

அரசிற்கும் புலிகளுக்குமிடையே போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக ஜெனீவாவில் பேச்சு நடை பெறும் வேளையில் இவ் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து ஜெனீவாவில் வசிக்கும் எட்டு அமைப்புக்களைச் சேர்ந்த மக்களே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் மூவினத்தையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

'சிறுவர்களை படையில் இணைக்காதே' 'அரசாங்கமே தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை முன்வை' 'முஸ்லிம் மக்களை மீளக்குடியமரவை' போன்ற பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர். (ச-39)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுலாக்கி இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும்!

## பேச்சு ஆரம்பமாகுமுன் அன்ரன் பாலசிங்கம் உரை



(ஜெனீவாவில் இருந்து நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையேயான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் முக்கிய சரத்துக்களை அரசாங்கம் இனியும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டுமென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனீவாவில் நேற்று அரசாங்கத்துடன் ஆரம்பமான ஜெனீவாப் பேச்சுக்களின் தொடக்கத்தில் அன்ரன்பாலசிங்கம் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு;

நோர்வே அனுசரணையாளர்களின் ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களால் சரியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக பெப்ரவரி 22 ஆம் நாளில் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இரு தசாப்தகாலத்திற்கு மேலாக நீடித்த பெருந்தொகையான உயிரிழப்புக்களுக்கும் பேரழிவுகளுக்குமான யுத்தத்தை இந்த நிகழ்வு முடிவுக்குக் (02 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.


எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



ஜெனீவாவில் நேற்று ஆரம்பமான பேச்சுக்களில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் அரச பிரதிநிதிகளையும், அவர்களின் மத்தியில் எரிக்சொல் ஹெய்ம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள் ரொய்ட்டர்)

# யுத்த நிறுத்தஒப்பந்தத்தை அமுலாக்கி...

கொண்டு வந்தது. இருந்தபோதும் 2005 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து இந்த ஒப்பந்தம் பாரிய சிக்கலுக்குள்ளானது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்பது ஒருதரப்பினருக்கு மட்டும் ஆதரவானதாக உருவாக்கப்படவில்லை. இருதரப்பினரும் முன்வைத்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக நோர்வே தரப்பினரது உதவியுடன் உருவாக்கப்பட்டதே இந்த ஒப்பந்தம்.

அமைதி முயற்சிகளைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாக யுத்தநிறுத்த ஒப்பந்தம் இருக்கிறது என்பதே எமது தரப் பின்கருத்து. கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து சனவரி மாதம் வரையிலான வன்முறைகள் பாரிய அளவில் வடக்கு - கிழக்கில் நிகழ்ந்த போதும் ஒரு மோசமான நிழல் யுத்தத்துக்கு திரும்பிய நிலைமை ஏற்பட்டது.

**தமிழ் மக்கள் மீதான வன்முறைகள்**

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் கடத்தப்படுவதும் கொல்லப்படுவதுமான நிகழ்வுகள் நடந்தேறின. சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களின் உதவியுடன் சிறிலங்கா இராணுவத்தினரால் 109 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமை உத்தியோகப்பூர்வமாக பதிவாகி உள்ளது. சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பின்னர் 48 பொதுமக்கள் காணாமல்போயுள்ளனர். இந்த இராணுவ அடக்குமுறைகள் யாழ் குடாநாட்டில் மட்டும் பதிவாகி உள்ளன.

நாசமாக்கக் கூடிய யுத்தத்தில் பல படையினர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் விதமாக ஒட்டுமொத்தமாக தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடபட்டன.

சிறிலங்காவின் புதிய அரசாங்கம் நவம்பர் 19 ஆம் நாள் பொறுப்பேற்றது முதல் தமிழ் மக்கள் மீது அரசபடைகள் கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்முறைகள் குறித்த தரவுகளை நாம் இங்கே அளிக்கிறோம்.

மேலும் கடந்த 4 ஆண்டு காலங்களில் சிறிலங்கா இராணுவத்தினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் தமிழ் துணைக் குழுக்களினாலும் கொலப்பட்ட, காயப்படுத்தப்பட்ட பொதுமக்களின் தரவுகளையும் நாங்கள் அளிக்கிறோம்.

**புலிகள்மீது குற்றச்சாட்டு**

இதேபோல் விடுதலைப் புலிகளால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டதாக அரசாங்கம் தெரிவிக்கிற குற்றச்சாட்டுக்களின் விவரங்களை சிறிலங்கா அரசாங்கம் வைத்திருக்குமேயானால் அதை கையளிக்கவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 4 ஆண்டுகளில் 5,464 யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களை மேற்கொண்டதாக உங்கள் அரசாங்கம் ஏற்கனவே புள்ளிவிவரங்களை வெளியிட்டிருகிறது.

இப்படியான மிகைப்படுத்தப்படுகிற எண்ணிக்கைகளை நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம். ஆதாரப்பூர்வமான யுத்த நிறுத்த மீறல்களை வெளியிடுங்கள். அரசாங்கம் வெளியிட்டிருக்கும் பாரிய யுத்த நிறுத்த மீறல்களாக சிறார் படை சேர்ப்பு விடயமே உள்ளது. உங்கள் அரசாங்கமும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவும் இத்தகைய குற்றச்சாட்டைத் தெரிவித்துள்ளன. எமது வடக்கு - கிழக்கில் சிறார் உரிமை தொடர்பான விடயங்களை பின்னர் சு.ப. தமிழ்ச்செல்வன் உங்களுக்கு விளக்கம் அளிப்பார்.

இதே நேரத்தில் நாம் மற்றொன்றையும் சுட்டிக்காட்டுகிறோம். சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் படுகொலைகள், அரசியல் படுகொலைகள், கடத்தல்கள், சித்திர வதைகள், தாக்குதல்கள், சிறாரை பலவந்தமாக படைக்குழுக்களில் சேர்த்தல் போன்ற யுத்த நிறுத்த மீறல்களை சிறிலங்கா அரசாங்கமும் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் புறக்கணித்துள்ளனர். துணை இராணுவக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய குற்றங்களில் பெரும்பாலானவை தமிழீழ விடுதலைப் புலிகள் மீதே சுமத்தப்படுகின்றன.

மிக அண்மையில்தான் இந்த ஆயுதக் குழுக்கள் அமைதி முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன என்பதை இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு உணர்ந்திருக்கிறது என்பதை நாம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

துணை இராணுவக் குழுக்களின் குற்றச் செயல்களானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதில் பாரிய பிரச்சினைகளை உருவாக்குகிறது. இது விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் பாரிய கவனம் செலுத்தல் வேண்டும்.

இந்த பேச்சு மேசையின் முக்கிய விடயம் யுதத நிறுத்த ஒப்பந்தம் தொடர்பிலானது.

யுத்த நிறுத்த ஒப்பந்தமானது ஆக்கப்பூர்வமானது, அர்த்தமுள்ளது என்பதால் அதனைச் செயற்படுத்த நடைமுறைச் சாத்தியமான வழிகளை நாம் கோருகிறோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துகளை செயற்படுத்தாமையால்தான் அண்மையில் வன்முறைகள் ஏற்பட்டு யுத்த சூழல் உருவானதாக நாம் கருதுகிறோம்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்திலிருந்து இந்த முக்கிய சரத்துகளைச் செயற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தவறிவிட்டது. இது தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்துக்கு பல முறை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போதும் இதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்த வலியுறுத்திய எமது உள்ளார்ந்த செயற்பாடுகள் அனைத்தும் தோல்வியடைந்தன.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையேயான அதிகாரப் போட்டியால் அமைதி முயற்சிகள் முன்னெடுப்பதில் பாரிய முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அமைதிப் பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் வடக்கு - கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் சீர்குலைந்தன.

**ஆயுதக்குழுக்களின் தாக்குதல்**

எமது போராளிகள், ஆதரவாளர்கள் மீது நேரடித் தாக்குதல்களை-ஒரு நிழல் யுத்தத்தை சிறிலங்கா அரச படையினர், துணை இராணுவக் குழுவினரது உதவியுடன் நடத்தினர்.

வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பில் தமிழ் துணை இராணுவக் குழுவினரது செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை உங்கள் பார்வைக்காக நாங்கள் தருகிறோம்.

பிரதானதுணை இராணுவக் குழுக்கள், அவர்களது தலைவர்கள், அவர்களின் கட்டமைப்பு வசதிகள், முகாம்களின் இருப்பிடங்கள், சிறிலங்கா அரச படைகளுக்கும் குறிப்பாக சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கும் அவர்களுக்குமான தொடர்புகள் அந்த அறிக்கையில் ஆதாரங்களுடன் தருகிறோம்.

அவர்கள் சாதாரண ஆயுத சக்திகள் அல்ல, சிறிலங்கா இராணுவத்தால் நன்கு பயிற்றுவிக்கப்பட்டவர்கள். நிழல் யுத்தத்துக்காக உருவாக்கப்பட்டவர்கள். சில ஆயுதக் குழுக்கள் இருதசாப்த காலத்துக்கும் மேலாக இயங்கி வருகின்றன. அவர்கள் தொடக்கத்தில் அரசியல் காரணங்களுக்காக ஆயுதமேந்தினார்கள். பின்னாளில் இந்தியத் தலையீட்டுக்குப் பின்னர் அவர்கள் அரசியல் கொள்கைகளை கைவிட்டு இந்திய அமைதிப் படையினருடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகதாக்குதல்களை மேற்கொண்டனர்.

இந்திய அமைதிப் படையின் விலக்கத்திற்குப் பின்னர் இந்த ஆயுதக் குழுக்களின் புதிய மாஸ்டரான சிறிலங்கா அரசாங்கம், அதன் இராணுவம், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்காக இணைந்தனர்.

இந்த ஆயுதக் குழுக்கள் அரசியல் கட்சியாகமைய நீரோட்டத்தில் இணைந்திருந்தாலும் அவர்கள் தங்களது இராணுவப் பிரிவுகளைக் கலைக்கவில்லை.

இந்த இராணுவ துணைக் குழுக்களினால் எமது இயக்கத்தின் பல தலைவர்கள், போராளிகள், மிகச் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதை எமது அறிக்கையில் நாங்கள் தந்துள்ளோம்.

ஈ.பி.டி.பி. உள்ளிட்ட துணை இராணுவக் குழுக்களின் முகாம்களானது சிறிலங்கா இராணுவ முகாம்கள் மற்றும் சிறிலங்கா காவல் நிலையங்களுக்கு அண்மித்த பகுதியில் அமைந்திருக்கும் வரைபடத்தையும் நாங்கள் கையளிக்கிறோம்.யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8இன் கீழ் தமிழ் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களை சிறிலங்கா இராணுவம் களைய வேண்டும். இந்த மிக் முக்கியமான சரத்தைச் செயற்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தவறிவிட்டது.இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் இந்த தமிழ் ஆயுதக் குழுக்களினால் அமைதிச் சூழலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.சர்வதேச சமூகமும், இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளும் கூட துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருமாறு உங்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் கூட சிறிலங்கா ஜனாதிபதி மகிந்த, தமிழ்த்துணை இராணுவக் குழுக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இயங்க அனுமதிக்கமாட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

**ஆயுதக்குழுக்கள்**

மொத்தம் 5 முக்கிய இராணுவ துணைக் குழுக்கள் வடக்கு - கிழக்கிலும் கொழும்பிலும் இயங்கி வருகின்றன.கருணா குழு, ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃ.ப். (வரதர்) மற்றும் ஜிகாத் குழு எனப்படுகிற முஸ்லிம் துணை இராணுவக் குழுவினரே துணை இராணுவக் குழுவினர்.எமது அறிக்கையில் இந்த ஒவ்வொரு குழுவினர் பற்றியும் அவர்களது தலைமை மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட அவர்கள் இயங்கும் பிரதேசங்கள் ஆகியவற்றை எமது அறிக்கையில் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினருடன்தான் அவர்கள் குறிப்பாக இணைந்து செயற்படுகின்றனர்.

தமிழ் இராணுவ துணைக் குழுக்களினது ஆயுத வன்முறைகளால்தான் தமிழர் பகுதிகளில் அமைதி முயற்சிக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எமது விடுதலை இயக்கமும் தமிழ் மக்களும் கருதுகின்றனர். ஆகையால் இந்த துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களை சிறிலங்கா அரசாங்கம் களைய வேண்டும் என்று நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

**பாடசாலைகள், ஆலயங்களில் இராணுவம்**

யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகளின்படி சர்வதேச சட்டவிதிகளுக்கமைய பொது மக்களுக்கு எதிரான எதுவித போர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது, குறிப்பிட்ட காலத்துக்குள் வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், பொதுமக்கள் கட்டிடங்களிருந்து படையினர் விலகவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழர் தாயகத்தில் இன்னமும் பல பாடசாலைகளும் வழிபாட்டுத் தலங்களும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன.யாழ்ப்பாணத்தில் மட்டும் 35 முக்கிய பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

201 இந்து மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களுக்கு மக்கள் செல்ல முடியாத நிலை இருக்கிறது. சிறிலங்கா இராணுவத்தின் இந்த ஆக்கிரமிப்பானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு எதிரானது.

**உயர்பாதுகாப்பு வலயம்**

வடக்கு - கிழக்கில் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் அதி உயர்பாதுகாப்பு வலயத்தை உருவாக்கி உள்ளனர்.

குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டில் பொதுமக்கள் பெருந்தொகையாக வசிக்கும் இடங்களில் இந்த அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டமையால் மக்கள் பாரிய பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர்.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் இந்த அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் குவிக்கப்பட்டிருப்பதால் யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தங்களது விவசாய நிலங்கள், மீன்பிடி பிரதேசங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல முடியாமல் உள்ளன. ஆக்கிரமிப்புப் படையினரால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் பாரிய அநீதி இது.

தமிழ் மக்களின் சமூக கலாசார வாழ்வை சீரழிக்கின்றனர்.அதிஉயர் பாதுகாப்பு வலயங்களினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலான அறிக்கையையும் நாங்கள் அளிக்கிறோம்.அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் 28,839 வீட்டு உரிமையாளர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். 13,000 ஏக்கர் நிலங்களில் விவசாய செயற் பாடுகளை மேற்கொள்ள இயலாமல் உள்ளனர்.

இந்த அதி உயர் பாதுகாப்பு வலயத்தினால் 20 ஆயிரம் குடும்பங்கள் அகதி முகாம்களிலும் நலன்புரி மையங்களிலும் 10 ஆண்டுகாலத்துக்கும் மேலாக வசித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் 30 வீதமான பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விதிகளுக்கு எதிராக இந்த செயற்பாடுகள் உள்ளமை என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

அகதி முகாம்களில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மனிதாபிமான நெருக்குவாரங்களுக்குள்ளாகி உள்ளனர். தங்களது வீடுகளுக்குத் திரும்பும் அடிப்படை உரிமையைக் கூட சிறிலங்கா அரசாங்கமும் படைத்துறையினரும் மறுத்து வருகின்றனர்.

பாதுகாப்பு என்கிற பெயரில் நீண்டகாலம் எம் மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளைப் புறக்கணிக்க கூடாது. இனியும் எதுவித தாமதமு மின்றி அதி உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வு காணவேண்டும்.

இதுதான் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இயல்பு நிலைமையைத் தோற்றுவிக்கும். அதேபோல் மீன்பிடித் தடைகளால் பெருந்தொகையான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது அறிக்கைகளில் தமிழ் மீனவர் சமூகம் முகம் கொடுத்து வரும் விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தடைகள் தொடர்பில் பேச்சுக்களின் போது நாம் விரிவாக எடுத்துக் கூறுகிறோம்.

**அரசியல் போராளிகளின் நடமாட்டம்**

அடுத்தது- முக்கியமானது சிறி லங்கா இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது அரசியல்துறை போராளிகளின் சுதந்திர நடமாட்டம் தொடர்பிலானது. இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக பணியாற்றிய எமது அரசியல் போராளிகளை துணை இராணுவக் குழுவினர் படுகொலை செய்தமை மற்றும் எமது அரசியல் அலுவலகங்கள் மீது குண்டு வீசப்பட்டமையை அடுத்து எமது தலைமைப் பீடம் அரசியல்துறை போராளிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து விலக்கிக் கொண்டதை நீங்கள் அறிவீர்கள்.

சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு தமிழ் மக்கள் பகுதிகளில் இயல்புநிலை திரும்புகின்ற போதுதான் எமது அரசியல்துறை போராளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்க முடியும்.ஆகையால் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துகிற சாத்தியங்களை ஏற்படுத்தி மக்கள் வாழ்க்கையில் இயல்புச் சூழலை உருவாக்க வேண்டும். அதுதான் அமைதி முயற்சிகளை முன்னெ டுப்பதற்கு முக்கியமானது ஆகும் என்றார் அன்ரன் பாலசிங்கம். (ச)

# விடுதலைபுலிகள் பெறும் வெற்றி தமிழர்களுக்கு மட்டுமல்ல; சிங்களவர்களுக்கும் இதர தமிழ்க் குழுக்களுக்கும் தான்!

## பாலகுமாரன் விளக்கம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் பெறப்போகும் விடுதலை தமிழருக்கு மட்டுமன்றி சிங்களவருக்கும் இதர தமிழ்க் குழுக்களுமான விடுதலையும் கூடத்தான் என்று விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலியில் கடந்த 18ஆம் திகதி அரசியல் அரங்கம் பகுதியில் அவர் ஆற்றிய உரையின் தொகுப்பு வருமாறு,

ஜெனீவாப் பேச்சுக்கள் எல்லோரும் எண்ணுவதுபோல் நல்லபடியாக நடந்தேற வேண்டும் என்ற எண்ணங்களை இங்கே நாங்கள் பிரதிபலித்துக் கொள்கிறோம்.

அந்தப் பேச்சுவார்த்தைக்குக் குழுவிலே எச் டி.சில்வா போன்ற தீவிர இனவெறி கொண்ட சட்டவாளர்களை அழைத்துச் செல் லப்படுவதில் எங்களுக்கு மனச் சங்கடங்கள் இருந்த போதும் ஒரு மனமாற்றத்தோடு நல்லெண்ணத்தோடு அவர்கள் செல்வார்கள் என்று காத்திருக்கிறோம்.

பாரதி பாடிய கவிதைத் துளிகளான 'நல்லன எண்ணல் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும், திண்ணிய நெஞ்சம் வேண்டும்' என்பதுபோல், சிங்கள தரப்புக்கு இந்த நல்லெண்ணம் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

எண்ணிய முடிதல் வேண்டும், என்று பாரதி பாடுவது போல் தமிழ் மக்கள் வேண்டுகிற எண்ணுகிற அமைதி வேண்டும்.

இம்முறை வித்தியாசமான பரிமாணம் பற்றி பேச உள்ளோம். தமிழிலே பரிமாணம், பரிணாமம் என்று இரு சொற்கள் உள் ளன. புதிய பரிணாமம் என்னவெனில் புலிகள் 'அம்பலத்தாடிகள்' என்று சுருக்கமாகச் சொல்லலாம் அம்பலத்தாடிகள் என்று சொன்னால் அறையிலே ஆடி அம்பலத்திலே ஆடுவது என்று சொல்வார்கள்.

சர்வதேசத்தின் முன்னால் புலிகள் இன்று ஓர் அம்பலத்தாடிகளாக இருக்கிறார்கள் இதனை ஒரு புதிய பரிணாமம் அல்லது படிமுறை வளர்ச்சி என்று சொல்லலாம். உலகின் கண் முன்னே மிகப்பெரிய ஊடகப் போர் நடக்கிறது. இதுவரை எவருக்கும் கிட்டாத ஊடக ஈர்ப்பு எமக்குக் கிட்டியிருக்கிறது.

கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் ஊடகங்களில் சம வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது, இது வரலாற்றில் முன் எப்போதும் நடந்திராத ஒன்று. கொழும்பில் பேட்டி எடுக்கிறவர்கள் எல்லாம் சூட்டோடு சூடாக கிளிநொச்சி வந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் பார்க்கிறார்கள்.

ஒரு கை தட்டி ஓசை வராது என்பதை

கிடைக்கக் கூடாது என்று செயற்பட்ட ஜே.வி.பி. மஹிந்தரால் இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. என்று எண்ணுகிற போது வரலாற்றின் நீதியான தீர்வாக அதைப் பார்க்கிறோம்.

உலகத்தின் அடுத்த சூடான மோதல் களமாக தமிழீழத்தின் தேசப்பரப்பு அமையப் போகிறது. என்ற உண்மை உலகத்துக்கு விளங்கி விட்டது. அரசியல் களமாக இருந்தாலும் சரி இராணுவ களமாக இருந்தாலும் சரி மிகப் பெரிய செய்தித் தகவல்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு செய்திக் களஞ்சியம் உள்ள இடமாக எங்கள் நிலப் பரப்பு மாறியிருப்பதை உலகம் உணர்ந்து வருகிறது.

எங்களுடையே அரசியல் தளம் விரிந்து ஜெனீவா பேச்சுவார்த்தையையடுத்து இறுதிக் களம் நெருங்கிவருவதை உலகம் உணர்ந்திருக்கிறது. ஆகவே செய்தி சேகரிப்பதற்கு உலகம் ஆயத்தமாகி வருகிறது. ஒரு வேளை சில காலத்தின் பின்னால் பிரபலமான செய்தி ஸ்தாபனங்கள் தங்களது அலுவலகங்களை கிளநொச்சியில் திறக்க நேர்ந்தாலும் நேரலாம்.

இதற்கு என்ன காரணம் புலிகள் இயக்கம் இப்போது வெறுமனே புலிகள் இயக்கம் அல்ல. புலி இப்போது புலி அல்ல. புலி ஒரு இனத்தின் நாட்டின் தேசத்தின் ஒரு முழு சமூகத்தின் ஆளுமையின் வெளிப்பாடு. அந்த ஆளுமையின் செயற்பாடுகளின் உச்ச வீச்சுத் திறனை ஒரு பரந்து பட்ட சமூக அமைப்பாக புலிகள் இயக்கம் இன்றைக்கு மாறி விட்டது. புலிகள் எத்தனை புலிகளடி என்று பாட்டுப்பாட வேண்டிய நிலைதான் இன்று ஏற்பட்டுள்ளது. எந்த வடிவத்துக்குள்ளும் தன்னை மாற்றிக்கொள்ள மனிதனால் முடியும் என்ற மதிப்பிற்குரியகுடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் செய்தியைத் தான் இன்று புலிகள் பிரதிபலிக்கிறார்கள். தொடக்கத்திலே இராணு வப் புலியாக இருந்தவர்கள் இன்றைக்கு அரசியல் புலியாகி– இராஜதந்திரப் புலியாக– மருத்துவப் புலியாக- என பல் வகைப்பட்ட புலிகளாக மாறியவர்கள் இன்று உடகப் புலியாக மாறியிருக்கிறார்கள்.

பயங்கரவாதப் புலி என்ற சொல்லெல்லாம் அர்த்தம் இழந்து போய் தார்மீக நியாயத்தின் அடிப்ப டையின் ஓர் இனத்தின் விடுதலைக்காக மிக நீண்ட காலமாக உலகத்தின் கண்களில் மறைக்கப்பட்டு செய்யப்பட்ட போராட்டம் தவிர்க் க முடியாமல் அதனுடைய இடத்தை அடைந்து விட்டது. எங்கள் விடுதலைப் போராட்டத்தை ஒரு பழிவாங்கல் நிகழ்ச்சியாகவோ, ஒரு பதவிக்கான

தேகம் என்று அண்மையில் சிலர் தெரிவித்துள்ளார்கள். யாரும் உண்மையிலேயே சந்தேகப்படவேண்டியதில்லை. புலி பெற்றுக்கொள்ளப் போகிற இனத்தினது விடுதலை என்பது பல பேருக்கு விடுதலையைக் கொடுக் கப் போகிறது. ஏன் சிங்கள மக்களுக்கும் அரசோடு ஒட்டியிருக்கும் தமிழ்குழுக்களுக்கும் கூட விடுதலையைக் கொடுக்கும்

அன்று இவர்கள் எல்லாம் வெட்கித் தலை குனிவார்கள். ஊடக உலகம் உணர்ந்திருக்கும் உண்மையை இவர்கள் ஏன் அறிய மறுக்கிறார்கள்? என்று புரியவில்லை.

எமது போராட்டத்தின் வீச்சை, உத்திகளை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஜெனீவாப் பேச்சுவார்த்தை முடிகின்ற போது இந்த மாற்றங்களை அனைவரும் அறிந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

கடந்த இரண்டு அல்லது மூன்று நாட்களாக வெளிவந்த அனைத்துப்பத்திரிகைகளிலும் இணை த்தளங்களிலும் எல்லாத் தரப்பினரு் தங்களது உத்திகளை, மூல உபாயங்களை பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

அன்று மறைத்துப் பேசிய காலம் இருந்தது. இன்றைக்கு எதிரிகள் கூட தங்களது தகவல்களைச் சொல்ல வேண்டிய கட்டத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அண்மையில் மகிந்தர் 'ரைம்' பத்திரிகைக்குகொடுத்த பேட்டியை பார்த்தால் அவர் மிகவும் சிக்கல் பட்டுதன்னுடைய கருத்தைச சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்பது புலனாகும். 'தான்ஒரு புத்தன்' என்று அந் தப் பேட்டியில் மகிந்தர் சொல்லுகிறார். ஜே. ஆர். தன்னை ஒரு புத்தன் என்று சொன்ன போது 'ஜே. ஆர். ஒரு உண்மையாக புத்தனாக இருந்திருந்தால் ...?' என்று தலைவர் அவர் கள் கேள்வி எழுப்பியது நினைவுக்கு வருகிறது.

இன்று மஹிந்த ர் ஒரு உண்மையான புத்தனாக இருக்கிறாரா? தெற்கை அமைதியாக வைத்திருக்க வேண்டும்– இராணுவத்தை கட்டுக் கோப்பாக வைத்திருக்க வேண்டும்– எனக்கு பொறுமை இருக்கிறது. என்று மஹிந்த சொல்லுவதன் பொருள் என்ன?

'தெற்கை' என்பது ஜே.வி.பியை அவர் சொல்கிறார்,' இராணுவம் என்பது துணைப் படைகளைச் சொல்லுவதாக கருதுகிறோம். ஆகவே இன்றைக்கு எல்லோருமே தங்களுடைய நிலைப்பாடுகளை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்னொரு கேள்வியையும் 'ரைம்' பத்திரி கையாளர் கேட்டிருக்கிறார்.

அழகிய வளம் உள்ள ஒரு தீவிலே ஏன் இப்படி நேர்ந்தது என்ற கேள்விக்கு மஹிந் என்ன சொல்கிறார். தனக்கும் அது விளங்க வில்லை என்கிறார். சு.ப.தமிழ்செல்வன் சொன்னது போல் இது அவருடைய சிறு பிள்ளைத்



றில் மஹிந்தருடன் 13 அம்ச திட்டம் ஒன்றில் நாங்கள் முன்னரே கைச் சாத்திட்டிருக்கிறோம். அது தான் மஹிந்த சிந்தனை. அந்த சிந்தனை அடிப்படையிலேயே இயங்க வேண்டும். இந்த அரசு மஹிந்தருடைய அரசு அல்ல. ஒரு கட்சி அரசு அல்ல. பல கட்சி அரசு. ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைக ளுக்கு அமைவாக செயற்பட வேண்டும் என்று குண்டைத்தூக்கிப்போட்டுள்ளார். போர் நிறுத்த ஒப்பந்தம் முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட்டு புதிதாகச் செய்யப்பட வேண்டும் என்பது தான் மஹிந்த சிந்தனையின் அடிப்படை ஆனால் அப்படி உண்மையில் நடக்க வில்லை.

மஹிந்தவின் 'சிந்தனை' இன்று அவருக்கே 'நிந்தனை' யாக மாறி இருக்கிறது.

ஜே.வி.பி கூட இன்று புலிகளைப் பலவீனப் படுத்த வேண்டும் என்று சொன்னாலும் உலகத்தின் முன்னால் தங்கள் தரப்பை வெளிப் படுத்த வேண்டிய நிலைக்கு சிங்களம் இன்று முதன் முறையாக தள்ளப்பட்டிருக்கிறது.

நாங்கள் திரும்பிப் பார்க்கிறோம். எங்கள் துயரத்தின் குரல்– அழுத கண்ணீர் –சிந்திய குருதி உலகத்தின் கண்களுக்குத்தெரியாமல் முற்றிலுமாக மூடிமறைக்கப்பட்டு மூலையிலே அநாதையாக முற்றிகையிடப் பட்டிருந்தோம். ஆனால் இன்று எங்களது எதிரியே எங்களுக்கான அனைத்து வாய்ப்புக்களையும் உருவாக்கித்தந்திருக்கிற காலகட்டம் ஏற்பட்டிருக்கிறது.

எங்களது இறுதி வெற்றியைக் கூட எங்களது எதிரிதான் உறுதிப்படுத்துவான்.

பேச்சுவார்த்தை குழுவுக்கான பட்டறை நடந்த போது ஹாவார்ட் பல்கலைக்கழக நிபுணர்கள் வந்திருந்தார்களாம்.

அவர்களது போக்கு சிறிலங்கா தரப்புக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறதாம்

பேச்சுவார்த்தைக்கூடாக குறிப்பாக ஏழு வழிகளைக் கையாண்டு எப்படி அதை வெற்றி கரமாக்குவது என சொல்லியிருக்கிறார்கள்.

டாத ஊடக ஈர்ப்பு எமக்குக் கிட்டியிருக்கிறது.

கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் ஊடகங்களில் சம வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது, இது வரலாற்றில் முன் எப்போதும் நடந்திராத ஒன்று. கொழும்பில் பேட்டி எடுக்கிறவர்கள் எல்லாம் சூட்டோடு சூடாக கிளிநொச்சி வந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச்பார்க்கிறார்கள்.

ஒரு கை தட்டி ஓசை வராது என்பதை உலகம் நீண்டகாலத்துக்குப்பின்னர் உணர்ந்திருக்கிறது. எந்த வாய்ப்பு எங்களுக்குக்

பயங்கரவாதப் புலி என்ற சொல்லெல்லாம் அர்த்தம் இழந்து போய் தார்மீக நியாயத்தின் அடிப்ப டையின் ஓர் இனத்தின் விடுதலைக்காக மிக நீண்ட காலமாக உலகத்தின் கண்களில் மறைக்கப்பட்டு செய்யப்பட்ட போராட்டம் தவிர்க் க முடியாமல் அதனுடைய இடத்தை அடைந்து விட்டது. எங்கள் விடுதலைப் போராட்டத்தை ஒரு பழிவாங்கல் நிகழ்ச்சியாகவோ, ஒரு பதவிக்கான போரா ட்டமாகவோ, கிளர் ச்சியாகவோ பார்க்கக்கூ டாது. புலிகள் பேச்சுக்குச் செல்வது சந்

டைய நிலைப்பாடுகளை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய நிலைஏற்பட்டிருக்கிறது.

இன்னொரு கேள்வியையும் 'ரைம்' பத்திரி கையாளர் கேட்டிருக்கிறார்.

அழகிய வளம் உள்ள ஒரு தீவிலே ஏன் இப்படி நேர்ந்தது என்ற கேள்விக்கு மஹிந் என்ன சொல்கிறார். தனக்கும் அது விளங்கவில்லைஎன்கிறார். சு.ப.தமிழ்செல்வன்சொன்னது போல் இது அவருடைய சிறு பிள்ளைத்தனமான செயற்பாடாக உள்ளது.

ஜே. வி. பியின் செய்தி அறிக்கை ஒன்

எங்களது இறுதி வெற்றியைக் கூட எங்களது எதிரிதான் உறுதிப்படுத்துவான்.

பேச்சுவார்த்தை குழுவுக்கான பட்டறை நடந்த போது ஹாவார்ட் பல்கலைக்கழக நிபுணர்கள் வந்திருந்தார்களாம்.

அவர்களது போக்கு சிறிலங்கா தரப்புக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறதாம்

பேச்சுவார்த்தைக்கூடாக குறிப்பாக ஏழு வழிகளைக்கையாண்டு எப்படி அதை வெற்றிகரமாக்குவது என சொல்லியிருக்கிறார்கள்.

தொடர்பு கொள்ளல், வெளிப்படையாக கதைத்தல் , மாற்று வழியை ஆராய்தல் என்ற உத்திகளுக்கூடாகத்தான் பேச்சுக்கள் நடைபெற வேண்டும்.

ஹாவாட் பல்கலைக்கழகத்தினரது கருத்துக் கூட சிங்களத் தரப்புக்கு கசப்பாக இருந்திருக்கிறது என்ற செய்தி வெளிவந்திருக்கிறது.

உலகம் முழுமையும் அமெரிக்கா வரை தமிழ் மக்களது நீதி நியாயமான கருத்துக்கள் எதிரொலிப்பதை நாங்கள் பார்க்கிறோம்.

சண்முகசிவலிங்கம்என்ற கவிஞன் 1984 ஆம் ஆண்டு அலை இதழில் பாடிய கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

"எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன, எங்கள் இமைகள் கவிழ்ந்துள்ளன, எங்கள் உதடுகள் அண்டியுள்ளன, எங்கள் பற்களும் சுண்டிப் போயுள்ளன, நாங்கள் குனிந்தே நடந்து செல் கிறோம் , எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக , எங்களை நீங்கள் வண்டியில் பூட்டுக, எங்கள் முதுகில் கசையால் அடிக்குக, எங்கள் முதுகுத்தோல் பிய்ந்திருந்து போகட்டும், தாழ்ந்த புருவங்கள் ஒரு நாள் நிமிரும், கவிழ்ந்த இமைகள் ஒருநாள் உயரும், இறுகிய விரல்கள் ஒருநாள் துடிதுடிக்கும், சுண்டியபற்கள் ஒரு நாள் நறநறக்கும் இதுதான் நாங்கள் இப்போது பார்க்கிற செய்தி அதுவரை நீங்கள் எங்களை ஆள்க, அது வரை உங்கள் வல் லமை ஓங்குக!"

ஆகவே அதுவரை என்கிற எதுவரைக்கும் என்ற கேள்விக்கான முடிவை விரைவிலே காணவேண்டும். (கு)

# தென் ஆசியாவில் தேசிய மொழிகள்
## ஊடகமும் சமாதானமும்

கடந்த 11 ஆம் திகதி 12 ஆம் திகதிகளில் ஹைதராபாத்தில் நடைபெற்ற தென் ஆசிய நாடுகளுக்கான தேசிய மொழிகள் இலத்திரோனிக் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட தென்னாசிய நாடுகளுக்கான ஊடக தேசிய மொழியும் அமைதியும் என்ற தலைப்பில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில்,

★ முரண்பாடுகள் பிராந்திய ஒத்துழைப்பு நாட்டுக்குள்ளும் வெளியிலும் சுதந்திரமான செய்தி வெளியீடு, சுதந்திரமான , சுயேச்சையான விரைவு ஊடகம் ஆகியவற்றினூடாக சமாதானத்தீர்வுக்கான பங்களிப்பு.

★ தென்ஆசிய நாடுகளுக்கான சுதந்திர ஊடக மாநாடு 1 , 11 இன் ஊடகமும் சமாதானமும் என்ற விடயம் பற்றிய காத்மண்டு பிரகடனம் ஊடகமும் முரண்பாடான தீர்மானங்களும் பற்றிய லாகூர் பிரகடனம்

★ தென்ஆசிய மக்கள் சங்கமத்தில் சமாதானமான, ஒற்றுமையான, செழுமையான நிலையை ஏற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட வரைவு ஆகியன மீதான நம்பிக்கையையும் விசுவாசத்தையும்மீள உறுதி செய்தல்.

★ நேபாளத்திலும் மாலை தீவிலும் , தொட ரும் ஜனநாயக உரிமை த ஊடக நசுக்கல்களை அவதானித்தல்.

★ இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மீள ஆரம்பித்துள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பான அவதானிப்பு .

★ கருத்து வெளியிடும் சுதந்திரத்தை ஆதரிக்கும் அதே நேரத்தில் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து வெளிவந்த பத்திரிகையொன்று நபிகள் நாயகத்தின் கேலிசித்திரமொன்றைவெளியிட்டதன்மூலம் மத உணர்ச்சிக்கு தாக்கத்தை ஏற்படுத்தியதற்குக் கண்டனம்.

★ பாகிஸ்தானிலும் இதர நாடுகளிலும் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக நிகழ்ந்த மரணங்கள் அழிவுகளுக்கான அனுதாபம்.

★ இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஆரம்ப மாகும் பேச்சு வார்த்தைகளுக்கு வரவேற்பு.

★ 2006 தென் ஆசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தலுக்கு ஊக்குவிப்பு.

★ முரண்பட்ட குற்ற நிகழ்வுகள் மலிந்த பகுதிகளில் பணிபுரிந்த 12 க்கும் அதிகமான சக உறுப்பினர்களின் மரணத்திற்கு அனுதாபம்.

★ டாக்காவில் நடைபெற்ற சார்க் நாடுகளின் அமைச்சர்களது மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விசா அனுமதிக்கு விலக்களிக்கப்பட்டமை.

★ தேசிய , இன, மத ,மொழி சிந்தனை ஆகியவற்றுக்கப்பால் ஊடகவியலாளர்கள் கருத்துரைஞர் கொள்கையாளர் என்ற ரீதியில் கடமையாற்றுவதை வரவேற்றல்.

முதலிய பிரேரணைகள் ஹைதராபாத் பிரகடனம் என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்டன.

(து)

## இன்று ஒரு தகவல்

# திருமகள் கருணை

காட்டில் ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். திடீரென்று ஒருநாள் இலட்சுமிதேவி அதாவது திருமகள் அவர் முன்பு வந்து நின்று காட்சிகொடுத்தார். முனிவரே நீங்கள் முன்பு செய்துகொண்டிருந்த சில நல்வினைகாரணமாக நான் கொஞ்ச நாள் உங்களுடன் தங்கப்போகிறேன் என்றார். தாயே உங்களுடைய கருணையும் அதனால் வரும் செல்வமும் இல்லறத்தில் உள்ளவனுக்குத்தான் கிடைக்கவேண்டும் சந்நியாசியான எனக்கு எதற்கு செல்வம்? என்றார் அந்த முனிவர்.

முனிவரே இப்போது உங்களுக்கு செல்வம் வேண்டாம் என்றிருக்காலம் இருந்தாலும் நீங்கள் முன்பு செய்திருக்கும் புண்ணியத்தின் பயனாக குறிப்பிட்ட சில காலம் உங்களிடம் நான் இருந்து தீவிர வேண்டும். நான் உங்களிடமிருந்தால் எல்லாம் நல்லவிதமாக முடியும். பயப்படத் தேவையிருக்காது. சகல சக்திகளும் உண்டாகும். ராஜமரியாதைகள் கிடைக்கும். உலக மக்கள் உங்களை மிகவும் மதிப்பார்கள் என்றார். வேறு வழியில்லை முனிவர் பேசாமல் இருந்து விட்டார்.

ஒரு நாள் முனிவர் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தார் வழியில் ஒரு புதையல் கண்ணில் பட்டது. அதுவும் அவரது காலடியில் அதாவது திருமகள் அருள்... லட்சுமிகடாட்சம் அவருக்குக் கிடைத்திருக்கிறது. என்ற அர்த்தம் இருந்தாலும் இவர் எல்லா பாசங்களையும் விட்டவராயிற்றே அதனால் அதைத் தொடவே இல்லை பேசாமல் போய்விட்டார். மரத்தடியில் போய் வழக்கம் போல் உட்கார்ந்து கொண்டார். அதன்பின்யோசித்தார். திருமகள் நம்மிடம் தங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். நமக்கு அரச மரியாதை கிடைக்கும் என்று வேறு சொல்லியிருக்கிறார். அதைச் சோதித்துப் பார்க்கலாம் என்று முடிவு செய்தார்.

பக்கத்தில் ராஜசேகரம் என்ற ஒரு நகரத்தில் பராந்தகன் என்று ஒரு ராஜா இருந்தார். இந்த முனிவர் நேராக அந்த ராஜவிடம் போனார் இவர் வருவதைப் பார்த்ததும் அந்த அரசன் அரியனையிலிருந்து எழுந்து ஓடி வந்து குனிந்து இவரை வணங்கினான். இவர் உடனே அந்த ராஜாவின் தலையில் இருந்த மகுடத்தைக் காலால் எட்டி உதைத்தார். லட்சுமிதேவி ராஜ மரியாதை கிடைக்கும் என்று சொன்னாரல்லவா அதைச் சோதிக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்தார்.

சபையில் உள்ளவர்கள் எல்லாம் பதறிப் போய்விட்டார்கள். உடனே என்ன ஆனாது தெரியுமா? மன்னனின் கிரீடத்திற்குள் இருந்து ஒரு நாகபாம்பு தலையை நீட்டிக் கொண்டு வந்தது. 'ஆகா... இந்த முனிவர் ஒரு திரிகாலஞானி ஒரு பெரிய ஆபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியிருக்கிறார் என்று நினைத்து மன்னன் அந்த முனிவரின் காலில் விழுந்து வணங்கினான். இதைப் பார்த்து விட்டு மற்றவர்களும் வந்து காலில் விழுந்தார்கள்.முனிவரை புஷ்பரதத்தில் ஏற்றி குடை,சாமரம்,ஆலவட்டம் போன்ற உபசாரங்களுடன் ஊர்வலமாக அழைத்துக் கொண்டு வந்தார்கள். லட்சுமிதேவி சொன்னது போலவே ராஜமரியாதை கிடைத்துவிட்டது.

முனிவர் யோசித்தார் மறுபடியும் லட்சுமி கடாட்சதைச் சோதித்துப் பார்க்க விரும்பினார். ஒரு நாள் நடு ராத்திரி அந்தப்புரத்தில் ராஜாவும் ராணியும் படுத்துத் துங்கிக்கொண்டிருந்தார்கள். இந்த முனிவர் திடீரென்று உள்ளே நுழைந்தார். அவர்களின் முதுகில் பளார் பளாரென்று அடிகொடுத்து அவர்கள் இரண்டுபேர் கையையும் பிடித்துத் தர தரவென்று இழுத்து வந்து வெளியே விட்டார். இப்போது எப்படி நமக்கு ராஜமரியாதை கிடைக்கிறது என்று பார்ப்போம் என்று நினைத்தார். கொஞ்ச நேரத்தில் அந்தக் கட்டம் இடிந்து விழுந்தது. அவ்வளவுதான் மறுபடியும் ஓடிவந்து இவருடைய காலில் விழுந்தார்கள் "அடடா இந்தக் கட்டடம் இடியப் போவதை ஞானக் கண்ணால் பார்த்திருக்கிறாரே... எப்படிப்பட்ட மகான்என்றார்கள் அதன் பின் அந்த முனிவர் கொஞ்சக் காலம் ராஜமரியாதையுடன் இருந்தார்.

ஒரு நாள் இரவு லட்சுமி தேவி முனிவரின் கனவில் வந்து முனிவரே நாளை காலையில் உங்களை விட்டு நான் போய்விடுவேன் இனிமேல் உமக்கு எந்த உபசாரமும் நடக்காது என்று கூறிவிட்டு போய்விட்டார். மறு நாள் விடிந்தது. முதல் நாள் முனிவர் தன்னிடம் கொடுத்த ஒரு மாம்பழத்தை வெட்டி ஒரு துண்டை வாயில் போட்டான் மன்னன். உடனே மயங்கி விழுந்தான் அரச வைத்தியர்கள் வந்தார்கள். மாம்பழத்தில் விஷம் கலந்திருக்கிறது என்றார்கள். அந்தப் பழம் மரத்தில் இருக்கும் போதே நாகம் அதில் விஷத்தைக் கக்கியிருக்கிறது. இது தெரியாமல் அதை ராஜாவிடம் முனிவர் கொடுத்திருக்கிறார்.

மன்னன் மருந்து சாப்பிட்டு பிழைத்துக்கொண்டான் இனிமேல் இந்த முனிவர் இங்கிருப்பது நல்லதில்லை என்றான் மன்னன். காவலர்கள் அவரை அழைத்துக்கொண்டு போய் காட்டில் விட்டுவிட்டு வந்து விட்டார்களாம்.

கிருபானந்தவாரியார் சொன்ன கதை இது. திருமகள் கருணை எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற்காக அவர் இதைச் சொன்னார். இதையேநமது பாஷையில் சொல்லப் போனால் எல்லாம் ஒரு நேரம் தான் என்போம். நாம் சில சமயம் நல்லதென்று நினைத்துச் செய்வது கெட்டதாக முடியும் கெட்டதென்று நினைத்துச் செய்வது நல்லதாக முடியும்.

நமது ஆள் ஒருவன் ஜெயிலிருந்துவந்தான். ஏன் ஜெயிலுக்குப் போனாய்? என்று கேட்டேன். ஒரு முறை பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன் பக்கத்திலிருந்த என் நண்பன் '10 ரூபா கடன கொடு' என்று கேட்டான் அவனுக்கு உதவவேண்டும் என்பதற்காக நான் பொக்கெற்றிலிருந்து 10 ரூபா எடுத்துக்கொடுத்தேன். அதற்காக என்னை ஜெயிலில் தள்ளிவிட்டார்கள். என்றான் பொக்கெற்றிலிருந்து 10 ரூபா எடுத்துக்கொடுத்தது தவறா? என்று கேட்டேன் அப்படித்தான் அவர்கள் சொல்கின்றனர் ஏனென்றால் நான் பணம் எடுத்தது என்பொக்கெற்றிலிருந்தல்ல பக்கதில் நின்ற இன்னொருவடைய பொக்கற்றிலிருந்து என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பண்டார நாயக்க உருவாக்கிய புரட்சியை புதுப்பிப்போம்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுனரான எஸ். டபிள்யூ. ஆர் பண்டார நாயக்க ஏற்படுத்திய 1956 ஆம் ஆண்டு புரட்சியை மீளவும் புதுப்பிப்போம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

மகாஜன ஏக்சத் பெரமுனவின் 50 ஆம் ஆண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நவரங்கஹலவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிய போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் 1956 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ.ஆர் பண்டாரநாயக்க இடது சாரிகள் மற்றும் தேசிய சக்திகளை இணைத்து ஒரு புரட்சியை நடத்தினார்.

பண்டாரநாயக்க, எனது தந்தையார் டி.எம். ராஜ பக்ஷ, டபிள்யூ. தயா நாயக்க ஆகியோர் மகாஜன ஏக் சத் பெரமுனவை உருவாக்கி 1956 ஆம் ஆண்டு புரட் சியை நடத்தினர்.

ஏக்சத் பெரமுனவின் கொள்கைகளை சிறிமாவோ பண்டாரநாயக்கவும் தொடர்ந்தார். இருப்பினும் அதன் பின்னர் சிலர் அந்தக் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டனர்.

இடதுசாரிக் கட்சிகளோடும் தேசிய சக்திகளோடும் நான் இணைந்து நிற்பதை பலரும் எதிர்க்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அழித்துவிடப் போவதாக சிலர் கூறினர்.

நான் மாற்றுப்பாதையில் செல்வதாக சிலர் அச்சம் தெரிவித்தனர். ஆனால் மக்கள் விரும்பும் பாதையில் தான் நான் செல்கிறேன் என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. மகாஜன ஏக்சத் பெரமுனவின் தலைவரும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன நிகழ்வில் பேசுகையில் ஏக்சத் பெரமுனவின் கொள்கைகளால் மக்களுக்கு பல நன்மைகள் கிடைத்துள்ளன. மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையை நாம் தொடர்ந்து ஆதரிப்போம் என்றார். இந்நிகழ்விற்கு தனது பிரதிநிதியை முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பியிருந்தார். (க)

## கண்டிவீதி விஸ்தரிப்பு





கண்டி வீதியில் யாழ் செயலகத்துக்கு புறம்பாக அமைந்துள்ளதும், ஒருகா லத்தில் அரசாங்க அதிபர்களது உத்தியோக பூர்வ வசஸ்தலமாக விலங்கியதுமான 'பழைய பூங்கா' காணிகண்டி வீதியிலிருந்து உள் நகர்த்தப்பட்டு 6 மீற்றர் அளவுக்கு கண்டி வீதி அகலமாக்கப்பட்டுள்ளது.

பழைய பூங்காவின் கண்டி வீதியோரமாக அமைந்திருந்த மதில் உடைக்கப்பட்டதுடன் உள்நகர்த்தப்பட்ட காணி ஒரமாக புதியமதில் அமைக் கப்பட்டு வருகிறது.

யாழ் மாவட்டத்தில் இவ் வருடம் 5 வீதிகள் அகலப்படுத்த ப்படவுள்ளதற்கு முன்னுதாரணமாகவே இவ் வீதி அகலமாக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் செயலகப் பகுதியில் கடமையின் நிமித்தம் பெருமளவு மக்கள் கூடுவத னால் வாகன நெரிசல் அதிகமாகவுள்ளது எனவும் இவ் வீதி விஸ்தரிப்பினால் வாகன நெரிசலின் அளவினை ஒரளவு க்கு குறைத்துக் கொள்ள முடியும் எனவும் யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க-133)

## ஜெனீவாப் பேச்சுக்கள் ஒரு நாள் விளையாட்டல்ல

ஜெனீவாவில் நடைபெறு ம் பேச்சுக்களில் உடனே முடிவுகள் தெரிவதற்கு ஒரு நாள் விளையாட்டுப் போட்டி அல்ல என்று வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே தெரிவித்துள்ளார். ஜெனீவா சென்றுள்ள ஜெயராஜ்பெர்ணாண்டோபுள்ளே இது தொடர்பில் கருத்து தெரிவி க்கையில், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான பேச்சுக்கள் ஒரு நாள் விளைய ாட்டு அல்ல. ஒரே நாளில் முடிவுகள் தெரிந்து விடாது.

இந்தப் பேச்சுக்கள் தொடர் ந்து நடைபெறும். இரு நாள்களிலேயே முடிந்து விடாது. இந்த நிலையிலேயே இறுதி முடிவுகளை எதிர்பார்க்கக் கூடாது. இந்தப் பேச்சுக்களின் மூலம் இருதரப்பினரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவும் என்றார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. (க)

### அடுத்த சுற்றுப் பேச்சுக்களில்

## முஸ்லிம்களை தனித்தரப்பாக பங்குபற்ற அனுமதிக்க வேண்டும்

ஜெனீவாவில் நடைபெறுகின்ற அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையேயான சமாதானப் பேச் சுவாத்த்தைகளில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படாதமை குறித்து இலங்கை முஸ்லிம் அமைதி செயலகம் விசனம் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் எதிர்வரும் காலங்களில் இடம் பெறவுள்ள பே ச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டுமென்று சகல தரப்பினருக்கும்தாம் தெரிவித்ததாக முஸ்லிம் அமைதி செயலகத்தின் செயலாளர் நாயகம் தெரிவித்துள் ளார்.

நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியொன்றின் போதே அவர் இதனைத்தெரிவித்தார். அரசாங்கத்தரப்பில் முஸ்லிம் பிரதிநிதிகள் சிலர் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு சுதந்திரமானமுறையில் தொழிற்படக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்காதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்களுக்கிடையே பிளவுகள் பல இருந்தாலும் கூட முஸ்லிம் கள் தனித்தரப்பாக ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் அவர்கள் ஒற் றுமையாக இணை ந்து தனித்தரப் பொன்றை தேர்ந்தெடுப்பார்கள் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (க-9)

### வடகிழக்கு மாகாணத்தில்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 7.35 சதவீதமானவர்களே சித்தி

(கொழும்பு)

கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு வடக்கு -கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர்களில் 7.35சதவீதமானவர்கள்மட்டுமேசித்தியடைந்துள்ளதாக மாகாணக் கல்வியமைச்சு மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு இந்தப் பரீட் சைக்கு தோற்றிய 35 ஆயிரத்து 466 மாணவர் களில் 2 ஆயிரத்து 609 பேர் மட்டுமே சித்திய டைந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் தரம்-5 புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தியடைவது மிகவும் குறைவாக காணப்படுவதனால் பாடசாலை அதிபர் களும், வலயக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்று மாகாண கல்வியமைச்சின் உயர திகாரி யொருவர் தெரிவித்துள்ளார்.

எண்ணிக்கை ரீதியாக ஆகக் கூடுதலாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 466 மாண வர்களும், மட்டக்களப்பு வலயத்திலிருந்து 356 பேரும், திருகோணமலை வலயத்திலிருந்து 287 பேரும், வலிகாமம் கல்வி வலயத் தைச் சேர்ந்த 205 பேரும், கல் முனை கல்விவலயத்தைச் சேர்ந்த 192 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

சதவீத அடிப்படையில் ஆகக் கூடுதலாக திருகோணமலை கல்வி வலயப் பாடசாலையைச் சேர்ந்த 15.81 சதவீத மாணவர்களும், கந்தளாய் வலயத்தைச் சேர்ந்த 14.57 சதவீத மாணவர்களும் யாழ்ப் பாண வலயத்திலிருந்து 13.2 சதவீத மாணவர்களும், சித்தியடைந்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# ஜெனீவாவில் அரசு - புலிகள் பேச்சு இணைத்தலைமை நாடுகள் வரவேற்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே ஜெனீவாவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளமை இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய ஆணையக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது பற்றித் தெரிவித்துள்ளதாவது,

ஜெனீவாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெறுவதை ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான், நோர்வே, அமெரிக்கா ஆகிய இணைத்தலைமை நாடுகளின் அரசாங்கங்கள் வரவேற்கின்றன.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீது நம்பிக்கையை மீள உருவாக்கவும், எதிர்காலத்தில் அமைதியான வழியில் அதை முன் நகர்த்தவும் இந்தப் பேச்சுக்கள் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தை இரு தரப்பினரும் திறந்த மனதுடன் நெகிழ்வுத் தன்மையுடன் கையாண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

ஜெனீவா பேச்சுக்கள் நடைபெறும் என்று ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து வன்முறைகள் குறைந்துள்ளமையை நாம் வரவேற்கிறோம்.

இருதரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீதான ஈடுபாட்டை வெளிப்படுத்தும் விதமாக இந்த வன்முறைகள் குறைந்துள்ளன.

நோர்வே தொடர்ந்து அனுசரணையாளராக செயற்பட இணைத்தலைமை நாடுகள் முழு ஒத்துழைப்பை அளிக்கும்.

இலங்கையில் அமைதியை உருவாக்கும் நோர்வேயின் முயற்சிகளுக்கு நாம் முழுமையாக ஒத்துழைப்பு அளிப்போம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இலங்கைத் தமிழர்களை மறந்துவிடவில்லையாம்

**கலைஞர் மு.கருணாநிதி**



இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய கவலை தி.மு.கவுக்கு எப்போதும் உண்டு என்று தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திருச்சி ஊடகவியலாளர்களிடம் கருணாநிதி இது பற்றித் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர்களை நாம் எப்போதும் எமது சகோதரர்களாகவே நினைக்கின்றோம்.

இலங்கை தமிழர் பிரச்சினை பற்றிய கவலை தி.மு.கவுக்கு எப்போதும் உண்டு. அவர்கள் எங்கள் இதயத்தில் எப்போதும் உள்ளனர். இது போன்ற பிரச்சினைக்கு மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் ஆதரவு அளிக்கும் என்றார். (க)

# புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி ஜெனீவாவில் சிங்களவர் குழு பரப்புரை!

ஜெனீவாப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் பரப்புரைகளை மேற்கொள்வதற்காக இலங்கையின் அமைதி, ஐக்கியம் மற்றும் உரிமைகளுக்கான அமைப்பு ஜெனீவாவில் முகாமிட்டுள்ளனர்.

இது தொடர்பிலான சுவரொட்டிகளையும் ஜெனீவாவில் அவர்கள் ஒட்டியுள்ளனர்.

"யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்த விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று இந்த அமைப்பின் பேச்சாளர் ஹெச்.எல்.டி. மகிந்தபால தெரிவித்தார்.

"இப்பேச்சுக்களில் தீர்வு ஏதும் காணப்படும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இல்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள இலங்கையின் அமைதிச் செயற்பாட்டாளர் எனக் கூறப்படுகிற ஜெகான் பெரேராவும் ஜெனீவா சென்றுள்ளார்.

அவர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

"பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம். ஆனால் அது மெதுவாகவே ஏற்படும்.

கடந்த 3 ஆண்டுகளாக இரு தரப்பினரும் சந்திக்காத நிலையில் 2 நாட்கள் சந்திப்பின் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த முயற்சிக்கின்றனர்.

இந்தக் காலம் போதுமானது அல்ல" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜெனீவா ஊடகவியலாளர்களிடம் பேசிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யுத்த நிறுத்தம் என்கிற ஒரு செயற்திட்டம்தான் பேசப்படும். ஆனால் அதற்குள் ஓராயிரம் செய்திகள் விவாதிக்கப்படவுள்ளன என்று தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# அரசாங்க குழுவினருக்கு உதவும் கொழும்பு செயற்பாட்டு நிலையம்

(கொழும்பு)

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா புறப்பட்டுச் சென்றுள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் கொழும்பிலிருக்கும் செயற்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்ட பின்னரே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளரென அறிவிக்கப்படுகிறது.

பேச்சுவார்த்தைகளை முன் கொண்டு செல்கையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள கொழும்பிலிருக்கும் செயற்பாட்டு நிலையத்தின் உதவியை பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையிலான குழுவினர் கொழும்பிலிருக்கும் செயற்பாட்டு நிலையத்திலிருந்து ஜெனீவாவில் இருக்கும் குழுவினருக்கு உதவிகளை வழங்கிவருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தெரிவு

(நல்லூர்)

யாழ்.சுகவாழ்வு நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் நிறுவனத்தின், தலைவராகவும் பணிப்பாளராகவும் அருட் தந்தை எஸ்.டேமியன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். (க-134)

# கைதிகள் பரிமாற்றத்துக்கு ஹெல உறுமய கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான கைதிகள் பரிமாற்றத்துக்கு ஜாதிக ஹெல உறுமய கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சோபித தேரர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

புலிப் போராளிகளை விடுவித்துள்ளதன் மூலம் புலிகளை மகிழ்ச்சியடையச் செய்யும் தவறான செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இந்தத் தவறை அரசாங்கம் மீண்டும் செய்யக்கூடாது.

இதேபோன்ற தவறுகளை மீளச் செய்யக் கூடாது என்பதற்குத்தான் மஹிந்த ராஜபக்ஷவை மக்கள் தெரிவு செய்துள்ளனர் என்றும் சோபித தேரர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் விளக்கமறியலில் உள்ள மற்றொரு பொலிஸாரையும் விடுவிக்க விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் சோபித தேரர் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிப 2.00 மணிக்கு அதிபர் திருமதி சா.வாகீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வித் திணைக்கள சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன பொறியியலாளர் த.சுதர்சன், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் எஸ்.அகிலதாஸ் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-79)

* * *

(யாழ்ப்பாணம்)

யா.சென் மேரிஸ் (O.L.R) வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி

# நடமாடும் கல்விச்சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப, கொழும்பு கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட ஒருநாள் நடமாடும் கல்விச் சேவையில் 340 ஆசிரியர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் தேவைகள், குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் முகமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு ஏற்ப, மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஏச்.சுமண பாலாவின் ஏற்பாட்டில் நடமாடும் கல்விச் சேவை நடத்தப்பட்டது.

மேல் மாகாண பதில் முதல் அமைச்சர் ஹெக்டர் பெத்தமகே தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10.00 மணி தொடக்கம் 5 நடத்தப்பட்டன.

ஆசிரியர்களின் நிறைவேற்றப்படாத குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக 18 வகையான விடயங்களில் 340 ஆசிரியர்களின் தீர்க்கப்படாத விடயங்களுக்கு நடமாடும் சேவை மூலம் தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## சிறுதானிய பயிர்ச்செய்கை

யாழ்.மாவட்டத்தில் சிறு தானியப் பயிர்ச் செய்கைக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

குறிப்பாக வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, காரைநகர் ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை முடிவடைந்துள்ளதால் அப்பகுதி விவசாயிகள் சிறு தானியப் பயிர்ச்செய்கை

புலிப் போராளிகளை விடுவித்துள்ளதன் மூலம் புலிகளை மகிழ்ச்சியடையச் செய்யும் தவறான செயற்பாட்டை அரசாங்கம் மேற்கொண்

புலிகளுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் சோபித தேரர் கேட்டுக்கொண்டுள்ளார். (க)



நோர்வே கடற்றொழில் அமைப்பின் நிதி உதவியுடன் ஏ.ரி. நிறுவனத்தால், வொலிகண்டியில் நிறுவப்படவுள்ள பாரிய படகு கட்டும் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் நோர்வே கடற்றொழில் ஒன்றியத் தலைவர் குணால் அல்பம் அடிக்கல் நாட்டுவதைப் படத்தில் காணலாம்.

(படம்: செல்வக்குணசந்திரன்)

யா.சென் மேரீஸ் (O.L.R) வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சிங்கள மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மறை மாவட்ட அதி. வண ஆயரின் செயலாளர் அருட் தந்தை எஸ்.ஏ.றொசான் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக யா. புனித அடைக்கல அன்னை ஆலய மேய்ப்புப் பணிச்சபை செயலாளர் எ.எஸ்.அகஸ்ரீனும் கௌரவ விருந்தினராக யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத் தந்தை இ.ம.பயஸ் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-9)

* * *

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அதிபர் எஸ்.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராசாவும், சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு நிதிய பங்காளிகள் முகாமைத்துவ உத்தியோகத்தர் செல்வி உமா சுந்தரலிங்கம், செல்வி கிருஷ்ணலீலா சின்னத்தம்பி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-79)

மேல் மாகாண பதில் முதல் அமைச்சர் ஹெக்டர் பெத்தமகே தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10.00 மணி தொடக்கம் 5 மணிவரை நடமாடும் சேவைகள்

நகர் ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை முடிவடைந்துள்ளதால் அப்பகுதி விவசாயிகள் சிறு தானியப் பயிர்ச் செய்கைக்கு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## தொடர்பு கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் வடக்கு கிழக்கு துரித புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை 5 மில்லியன் ரூபா செலவில் மீள புனரமைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலையின் பின்புறமாக அமைந்துள்ள காணியில் இப் பணிமனை இம் மாதம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப்பணிமனை தாய் சேய் நலம், நோய்தடுப்பு பாடசாலை, சுகாதாரம் உணவு கையாளும் நிலையங்களின் சுகாதாரம் போன்ற பல செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் நிலையமாக செயற்படும். எனவே இப் பணிமனையில் சேவை யைப்பெற விரும்பும் இப் பிரதேச மக்கள் இப் புதிய பணிமனையுடன் தொடர்புகொள்ளலாம். (க)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்குப் பரீட்சைத் திணைக்களம் விண்ணபங்களைக் கோரியுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்குச் சென்ற ஆசிரியர்களுக்கு, அவர்களின் குறியீட்டு இலக்கத்துடன் அவரவரின் சொந்த முகவரிக்குத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனால் புதிதாக மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பாடசாலை அதிபர்களுக்குப் பிரத்தியேகமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தை மூலப் பிரதி செய்து விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளால் பூரணப்படுத்தப்பட்டு, அதிபர்களால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# கட்டட நிர்மாணத்துறையில் பாதுகாப்பு

யாழ். குடாநாட்டில் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடங்கள் தரக் குறைவாக உள்ளதுடன் ஊழியர்களின் பாதுகாப்பும் நன்கு பேணப்படுவதில்லை என அறியக் கூடியதாக இருக்கிறது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாண வர்த்தக கைத் தொழில் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட கட்டட நிர்மாணத்துறையின் பாதுகாப்பு சுகாதார கருத்தரங்கில் ஒரு நிறுவன முகாமைத்துவ அதிகாரி மட்டுமே கலந்துகொண்டார். ஆனால் அதே நிறுவனம் ஒழுங்கு செய்த சீமெந்து பற்றிய கருத்தரங்கில் கணிசமானோர் பங்கு பற்றினர். இதன் மூலம் யாழ். குடாநாட்டு மக்கள் பாதுகாப்பு நடவடிக்கை களுக்கு செலுத்தும் கவனம் எவ் வளவு என்பது புரிந்து கொள்ள முடியும்.

கட்டடம் தரமானதாக அமைய வேண்டுமாயின் தரம் வாய்ந்த நிர்மாணத்துறை மூலம் பொருட்களை பயன்படுத்த வேண்டும். அத்துடன் நல்ல வேலைத் திறனும் அமைய வேண்டும். இந்தியாவில் தமிழ் நாட்டில் இந்திரா குடியேற்றத் திட்டத்தில் வீடுகள் அமைக்க உதவும் நிதி நிறுவனம், நிலச்சொந்தக் காரர்களே வேலையாட்களை வேலைக்கு அமர்த்தித் தனது மேற்பார்வையில் வீட்டை நிர்மாணிக்காவிடின் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும் என்று முன் நிபந்தனை விதித்தது.

கடந்த யூன் மாதம் ஜெனீவாவில் உள்ள சர்வதேச தொழில் நிறுவனத்தில் நடைபெற்ற தொழில் சார் பாதுகாப்பு சுகாதார கருத்தரங்கில் கட்டட நிர்மாணத்துறையில் ஒவ்வொரு பத்து நிமிடத்திற்கும் ஒரு மரணவிபத்து நிகழ்கின்றது என்றும் ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். யாழ். குடாநாட்டில் கட்டட நிர்மாணத்தின் போது ஏற்படும் விபத்தில் சிக்கி கணிசமான அளவினர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவயவத்தை இழந்த பின்னர் ஏற்படும் காயத்திற்கு சிகிச்சை பெறுவதிலும் பார்க்க அத்தகைய விபத்துக்கள் ஏற்படாமல் தடுத்து தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு முறையினை நிர்மாணத் துறையில் கடைப்பிடிப்பது சாலச் சிறந்தது. அதற்குரிய தகவல்களினை தொழில்சார் பாதுகாப்பு சுகாதார சேமநல தகவல் நிலையத்தில் அறிந்து கொள்ள முடியும்.

பொருட்கள் வீழ்வதினாலும் தொழிலாளர்கள் வீழ்வதினாலும் அதிக அளவு விபத்துக்கள் நிகழ்கின்றன. சாரம் கட்டுவது அனுபவம் மிக்க தொழிலாளியின் மேற்பார்வையிலேயே செய்யப்பட வேண்டும். நிர்மாணிக்கப்படும் கட்டடத்தின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க ஆபத்துக்களும் அதிகரிக்கின்றன. நிர்மாணிக்கப்படும் கட்டடங்களிற்கு தற்காலிக மின் இணைப்பு I.E.E. Regulation இற்கு அமைய வழங்கினால் மின் அதிர்ச்சியினை தவிர்க்கலாம்.

## சி.மகேந்திரராஜன்
### மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர்

கட்டட நிர்மாணத் துறைக்குரிய பொருட்களை வழங் கும் இயந்திர மயமாக்கப்பட்ட தச்சுத் தொழில், மின்சாரத்தினால் உருக்கி இணைக்கும் தொழில், கல்லுடைக்கும் ஆலைகள் போன்றவற்றின் எண்ணிக்கை 3-4 மடங் காக அதிகரித்துள்ளன. இவை High risk operation ஆகும். இவற்றில் தொழில் புரியும் போது ஏற்படும் காயங்கள் பாரதூரமானவை. இவற்றினை தவிர்ப்பதற்குரிய ஆலோசனையை மட்டும் என்னால் கூறமுடியும்.

# மின் விநியோகம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச செயலகம் மின்பராமரிப்பு வேலைகளைச் சீர்செய்யும் பொருட்டு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பின் வரும் இடங்களில் மின் விநியோகம் தடைப் படும் என்பதை மின் பாவனையாளருக்கு அறியத்தந்துள்ளது.

இதற்கமைவாக சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப் பளை, பண்ணாலை ஆகிய பிர தேசங்களில் மின் தடைப்படும்.

இப் பிரதேசங்களில் மின் பராமரிப்பு வேலைகள் விரைவாக முடிவுற்றால் மேற் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பு மின்சா ரம் வழங்கப்படும் என்று மின்சாரசபை அறிவித் துள்ளது. (க-7)

## 'யாழமுதம்' சிற்றுண்டிச்சாலை மீண்டும் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடியில் நடாத்தப்பட்டு இடை நிறுத்தப்பட்டிருந்த சிற்றுண்டிச் சாலை நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழமுதம் என்ற பெயருடன் மீளத் திறக்கப்படவுள்ளதாக யாழ். பல நோக்குக் கூட் டுறவுச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ஜு)

# இராசி பலன்

**23.02.2006**
**(மாசி 11, வியாழக்கிழமை)**
**தசமி மாலை 5.37வரை**
**மூலம் முன்னிரவு 10.2மணிவரை**
**இராகுகாலம் 2.00-3.30மணிவரை**
**சுபநேரம் 8.00-9.30 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, காரிய தாமதம், பிரயாணம். |
| இடபம் | நிலைமாற்றம், அபகீர்த்தி, காரிய தாமதம், உடல் நலக்குறைவு. |
| மிதுனம் | களஸ்திர நன்மை, எடுத்த காரியம்கைகூடும், பெருமையடைதல், போசன சுகம். |
| கடகம் | ஆரோக்கியம், திடீர் நன்மை, தடைப் பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி. |
| சிங்கம் | வியாபார நன்மை, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், பண விரயம். |
| கன்னி | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், வாக்குமேன்மை. |
| துலாம் | அன்னியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, பிரயாண நன்மை, இனிய சம்பவம். |
| விருச்சிகம் | மாதர் நட்பு, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், வீண் வார்த்தை. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, பெரியோர் உதவி, தொழில் விருத்தி, முயற்சி கைகூடும். |
| மகரம் | உணர்ச்சிவசப்படுதல், வேலைச்சுமை, எடுத்த காரியம் தாமதமாகும், இடமாற்றம். |
| கும்பம் | முயற்சி கைகூடும், உஷ்ண வியாதி, புகழ், பொருள் சேர்க்கை. |
| மீனம் | நல்ல தகவல், உற்சாகம், தடைப்பட்ட காரியம் கைகூடும், புத்திசாதுரியம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# பொதுக்கூட்டம்

(நல்லூர்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு நிலையத்தலைவர் கி. மயில்வாகனம் தலைமையில் நிலையமுன்றலில் நடைபெறவுள்ளது.


இக் கூட்டத்தில் நிலைய மாதர் சங்கம், விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கான புது வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவுள்ளதால் சகல அங் கத்தவர்களையும் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (க-134)

# சமுர்த்தி நிவாரண விநியோகத்தில் முறைகேடுகள் -மக்கள் விசனம்

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி நிவாரண வழங்கலில் பல முறை கேடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்

இதற்கிடையில் பலருக்கு இன்னும் சமுர்த்தி நிவாரணம் கிடைக்கவில்லையென்றும் இது விடயமாக அப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தும் வகையில் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-134)



பாதசாரிகளுக்கும் வாகனப் பயணிகளுக்கும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் குன்றும் குழியுமாகக் காணப்படும் கஸ்தூரியார் வீதியின் தொடக்கப் பகுதி. (படம்:-திலீவின்பன்)

# துப்பாக்கிச் சூட்டில் கான்ஸ்டபிள் மரணம்

(புத்தளம்)

புத்தளம் காட்டுப்பகுதியில் இடம் பெற்ற துப் பாக்கிச் சூட்டில் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழ ந்துள்ளார்.


சட்ட விரோதமாக மரங்கள் வெட்டப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து குறிப்பிட் ட பொலிஸ் கான்ஸ்டபிலும் காட்டுலாக ஊழியர் ஒருவரும் இந்த இடத்திற்கு சென்ற போதே துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஆனைமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரி ழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சு-9)

## சட்டவிரோத மது விற்பனை

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு முதல் மாதத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத்தின் நடவடிக்கையில் மந்த நிலை ஏற்பட்டிருந்த போதிலும் இந்த மாதத்தில் மட்டும் 12 சட்ட விரோத சாராய விற்பனையும் 7 சட்ட விரோத கள் விற் பனையும் மதுவரித்திணைக்களத் தால் பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (து-133)




"குப்பைகளைப் போடாதீர்கள்" என அறிவிப்புப் பலகை அமைக்கப்பட்டிருந்தும் அதைப் பொருட்படுத்தாது பொது மக்களால் யாழ். ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில் கொட்டப்பட்ட குப்பை. (படம்:-திலீவின்பன்)


# அறிவித்தல்

2005 சனாதிபதித் தேர்தலின் பின்பு யாழ். தீபகற்பத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழு

ஸ்ரீலங்கா சனநாயக சோஷலிசக் குடியரசின் அதியுத்தம சனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால், ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. தர்மசிறி ஜயவிக்கிரம அவர்களை மேற்குறித்த ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் தலைவராகவும் சட்டத்தரணி ஜனாப் ஏ.ஜே.யூசுப் அவர்களை ஏனைய உறுப்பினராகவும் கொண்ட ஒரு குழுவை பின்வரும்விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளபடியால் அக்குழு பொது மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றது.

(அ) 2005 நவம்பர் 17ஆந் திகதி நடைபெற்ற சனாதிபதித தேர்தலின் பின்னர் அதாவது 2005 நவம்பர் 18 ஆந் திகதிக்கும் 2006 ஜனவரி 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்துள் யாழ். தீபகற்பத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலை நாட்டிச் செல்வதில் அனர்த்தத்தை ஏற்படுத்திய நிகழ்வுகள் எவை என்றும்,

(ஆ) அந்த நிகழ்வுகளுக்குப் பொறுப்பாளிகள் யார் என்றும்

(இ) அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்த்துக் கொள்ளுவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும்

இவை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு விருப்பங்கொண்ட நபர்கள் அல்லது அமைப்புக்கள் அத்தகவல்களை எழுத்துருவில் குழுவுக்கு 2006.03.16 ஆம் திகதிக்கு முன்னா பின்னவரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்து ஒத்துழைப்பு வழங்கலாம்.

மேற்படி விடயங்கள் தொடர்பான தகவல்களை இரகசியமாக வழங்க வேண்டும் என்று எவரேனும் எதிர்பார்ப்பதாயின் அதைப்பற்றி குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இக்குழுவிற்கு அனுப்பும் சகல கடிதங்களும் ஆவணங்களும் கீழே கையொப்பம் இடுகின்ற உத்தியோகத்தருக்கு அனுப்ப வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

குழுவின் ஆணைப்படி

**ஆர். எம். ஏ. பீ. ரத்நாயக்க**
குழுவின் செயலாளர்
அரச எழுதுநர் சேவைச் சங்கக் கட்டிடம் (03ஆம் மாடி)
இல. 90, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்த
கொழும்பு-02
22.2.2006

(C/209)

## கர்ப்பகால மன அழுத்த மாத்திரைகளால் குழந்தைக்கு பாதிப்பு!



கர்ப்பிணி பெண்களுக்கு தலைவலி, உடல் அசதி என்று பல பிரச்சினைகள் ஏற்படலாம் இத்தகைய நிலையில் மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் மருந்துக் கடைகளுக்குச் சென்று மருந்துகளை இஷ்டத்துக்கு வாங்கிச் சாப்பிடக்கூடாது இதில் மன அழுத்த மாத்திரைகளும் அடங்கும். கர்ப்ப காலத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்களால் சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு மன அழுத்தம் உண்டாகலாம். ஆனால் இதற்காக அவசரப்பட்டு மருந்துகளை வாங்கிச் சாப்பிடக் கூடாது.

குறிப்பாக, Prozac, Zoloft and Paxil ஆகிய மாத்திரைகளை பயன்படுத்த வேண்டாம். ஏனெனில் கர்ப்பத்தின் நடுப்பகுதியில் இந்த மாத்திரைகளை சாப்பிட்டால், கருவில் உள்ள குழந்தைக்கு நுரையீரல பாதிப்புகள் உண்டாகும் வாய்ப்பு உள்ளது. பல்மனரி ஹைபர்டென்சன் என்பது இந்த வியாதியின் பெயர்.

இந்த நோய் ஆயிரத்தில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே வரும். ஆனாலும் மிகவும் கொடிய தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 10 இல் ஒரு குழந்தை உயிரிழந்து விடும். ஒருவேளை மிதமான பாதிப்பு ஏற்பட்டால், காது கேட்கும் திறன் பாதிப்பு அல்லது மூளை பாதிக்கப்படலாம்.

இதைச் சொல்வதால், கர்ப்பிணி பெண்கள் மன அழுத்த மாத்திரைகளை ஒட்டுமொத்தமாக பயன்படுத்த வேண்டாம் என்பதில்லை. அவர்கள் மகப்பேறு மருத்துவர்களை அணுகுவதுடன் நிறுத்திக்கொள்ளாமல், மனநல மருத்துவரையும் போய் பார்த்து பேச வேண்டும். ஒருவேளை ஏற்கனவே மாத்திரைகளை பயன்படுத்திக் கொண்டிருந்தால், உடனே நிறுத்தி விடவேண்டாம். அது நிலைமையை இன்னும் சிக்கலாக்கி விடும். எதைச் செய்வதாக இருந்தாலும் மருத்துவர்கள் பரிந்துரையுடன்தான் செய்யவேண்டும்.

வெப் எம்டி இணையத்தளம் மேற்படி தகவல்களை வெளியிட்டுள்ளது.

## நீரிழிவு நோயாளிகள் கவனத்திற்கு...



மனிதனை பெரும் துன்பத்திற்கு உள்ளாக்கும் நோய்களில் நீரிழிவும் ஒன்று. இந்த நோயின் பாதிப்புக்கு உள்ளான பலரின் மத்தியில் பழங்கள் சாப்பிடலாமா? காப்பியில் சீனி போட்டுக் குடிக்கலாமா? என்ற கேள்விகள் அவ்வப்போது எழுந்து வாட்டி வதைத்துக்கொண்டே இருக்கின்றன.

இனிப்பான பழவகைகள், சப்போட்டா, மாம்பழம், பலாப்பழம் போன்றவைகளை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடக்கூடாது. ஆரஞ்சு, பப்பாளி, ஆப்பிள், கொய்யாஆகியவற்றைச் சாப்பிடலாம்.

காப்பியில் சீனி போட்டு சாப்பிடுவதை முற்றிலுமாக நிறுத்தி விடுவது நல்லது. அதனால் ஏற்படும் பாதிப்பு மூன்று நாளைக்கு இருக்கும் என்று டாக்டர்கள் எச்சரிக்கின்றனர். அதேபோல் அளவுக்கதிகமான பானங்களையும் தவிர்த்து விடுவது நல்லது. ஐஸ்கிறீம் போன்றவைகளையும் சாப்பிடக்கூடாது.

பான வகைகளைப் பொறுத்தவரை புளிப்பு ருசி உள்ளவற்றை அருந்தலாம். சீனிக்குப் பதிலாக புளிப்பு, உப்பு ருசி போன்றவற்றை அருந்தலாம். ஆடை இல்லாத பாலையும் சாப்பிடலாம்.

## எயிட்ஸ் நோயாளியின் ஆயுட்காலத்தை தீர்மானிக்கும் டி - செல்கள்



எயிட்ஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளித்தால் அவர்களின் ஆயுட்காலம் அதிகரிக்கும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

எயிட்ஸ் கிருமிகள் நோய் எதிர்ப்பு அமைப்பை எடுத்த உடனேயே அழித்து விடுவதில்லை. இதனால் உரிய மருந்துகள் மூலம் நோய் எதிர்ப்பு அமைப்பை பாதுகாத்தால், ஆரோக்கியம் மேம்படும்.

மனித உடம்புக்குள் எச்ஐவி கிருமிகள் புகுந்ததும் டி செல்களை குறிவைத்து தாக்க ஆரம்பிக்கும். இந்த செல்களின் எண்ணிக்கையை சிடி-4 என்று சொல்கிறோம்.

பொதுவாக டி செல்களின் எண்ணிக்கை 200 இருக்கும்போது ஆன்டிரெட்ரோ வைரல் எனப்படும் மருந்துகள் மூலம் சிகிச்சையை தொடங்கி விட வேண்டும். பெரும்பாலான மருத்துவர்கள் இதைத்தான் பரிந்துரை செய்கிறார்கள். சிலர் குறைந்தபட்சம் சிடி-4, 350 ஆக இருக்கும்போது சிகிச்சையைத் தொடங்கிறார்கள்.

இதனால் ஏற்படும் நன்மைகள் வருமாறு,




*டி செல்கள் எண்ணிக்கை 350 ஆக இருக்கும்போது சிகிச்சையை ஆரம்பித்தால் சம்பந்தப்பட்ட நபருக்கு சிறுநீரக பாதிப்பு வருவதற்கான வாய்ப்பு சிட்டத்தட்ட 60 சதவீதம் குறைந்து விடும்.

*நரம்பு மண்டலத்தில் பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு 30 சதவீதம் குறையும்.

*தோல், மூட்டு மற்றும் கன்னங்களுக்கு அடியில் கொழுப்பு குறைவது சிட்டத்தட்ட 60 சதவீதம் தவிர்க்கப்படும்.

ஆனால் நடைமுறை வாழ்க்கையில் பெரும்பாலான எயிட்ஸ் நோயாளிகள் டி செல்கள் எண்ணிக்கை 200க்கும் குறைவாகப் போன நிலையில்தான் சிகிச்சைக்கு வருகிறார்கள். இது மிகவும் ஆபத்தான கட்டம் ஆகும்.

இந்த இடத்தில் டி செல்கள் பற்றி சற்று விரிவாக தெரிந்துகொள்வோமே...

மனிதனின் நோய் எதிர்ப்பு அமைப்பில் காணப்படும் முக்கியமான செல்கள்தான் டி செல்கள் என்று வழங்கப்படுகிறது. இந்த செல்களின் எண்ணிக்கையை சிடி - 4 என்று குறிப்பிடுகிறோம்.

சிடி-4 செல்களின் வடிவமைப்பு எச்ஐவி கிருமிகள் தங்கி தாக்குவதற்கு ஏற்ற வகையில் இருக்கிறது. இதனால் குறைந்த நேரத்தில் பலமடங்கு பெருகிவிடும். இதனால் நாளடைவில் சிடி-4 போர் செல்களே அழிந்துபோகும்.

இதுபோல சிடி-4 போர் செல்கள் அழிந்துகொண்டே போனால் நோயாளி அபாய கட்டத்திற்கு செல்கிறார் என்பது பொருள்.

*அபாய கட்டம் எது?*

*சிடி- 4 செல்களின் எண்ணிக்கை 500 அல்லது அதற்கு அதிகமாக இருந்தால் ஆரோக்கியமானது.

*சிடி- 4 செல்களின் எண்ணிக்கை 200 முதல் 499 வரை இருந்தால் நோயாளி ஆபத்தின் விளிம்பில் உள்ளார் என்று அர்த்தம்.

*சிடி-4 செல்களின் எண்ணிக்கை 200க்கும் கீழே போய் விட்டால் நோயாளி அபாய கட்டத்தில் இருக்கிறார் என்பது பொருள் ஆகும்.

இதன்மூலம் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை எடுத்துக்கொண்டால் நோயாளியைக் காப்பாற்றி விடலாம்.

## இரத்த தானம் செய்தால் உடல் பலவீனமாகுமா?

இரத்த தானம் செய்தால் உடல் பலவீனமாகும் என்றும், பலவீனமாகாது என்றும் இருவேறு கருத்துக்கள் மக்களிடையே நிலவி வருகின்றன.

பொதுவாக நம் உடம்பில் சராசரியாக 5 லீற்றர் இரத்தம் உள்ளது. இதில் ஒருவரிடமிருந்து சுமார் 350 மில்லி லீற்றர் இரத்தம் தானம் அளிக்கும் போது எடுக்கப்படுகிறது. அதனால் அவர் உடல் பலவீனமடைய வாய்ப்பு இல்லை.



மேலும் இரத்ததானம் செய்த 72மணி நேரத்துக்குள் நம்மில் இருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தின் அளவு தானாகவே உடம்பில் ஊறி விடும்.

வழக்கமாக சாப்பிடும் சாப்பாடே போதுமானது. இழந்த இரத்தத்தை பெருக்க நோக்கத்தில் சத்து டொனிக்குகளையோ, அல்லது சத்து மாத்திரைகளையோ சாப்பிட்டாலும் தப்பில்லை.

ஒருவர் 3 மாதத்திற்கு ஒருமுறை இரத்ததானம் செய்யலாம். அப்படி இரத்த தானம் செய்யும் போது உடல் பலவீனம் அடைவதற்கோ, சத்து குறைவதற்கோ எந்தவித வாய்ப்பும் இல்லை.

மஞ்சள் காமாலை, எயிட்ஸ், பால்வினை நோய்கள், காசநோய், பிற தொற்று நோய்கள், உயர் இரத்த அழுத்த நோய், நீரிழிவு நோய், இதய நோய் உள்ளவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் இரத்த தானம் செய்யக்கூடாது.

## தேன் தடவினால் முடி நரைக்குமா?



தேன் தடவினால் தலையில் உள்ள முடிகள் எல்லாம் நரைத்துவிடும் என்று பலரால் நம்பப்படுகிறது.

ஆனால் இது தவறான தகவல் என்று டாக்டர்கள் கூறுகின்றனர். முடி நரைப்பது அவரவர் மரபணுக்களைப் பொறுத்த விஷயம்.

முடியில் உள்ள மெலனின் எனும் நிறமியால்தான் நமது தலைமுடி கறுப்பாக உள்ளது. மெலனின் உற்பத்தி குறைந்துவிட்டால் முடி நரைக்கத் தொடங்கும். மெலனின் உற்பத்தி தொடர்வதும், நிற்பதும் மரபணு அமைப்பு மற்றும் சத்துக் குறைவு ஆகியவற்றைப் பொறுத்து என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக 40 வயதில்தான் முடி நரைக்கத் தொடங்கும். பரம்பரை காரணம் என்றால் சிலருக்கு அதற்கு முன்பாகவே முடி நரைக்கத் தொடங்கி விடும் என்றும் டாக்டர்கள் கூறுகின்றனர்.

# 314 சட்டவிரோத மது விற்பனையாளர்களுக்கு 6 இலட்சத்து 65 ஆயிரத்து 500 ரூபா தண்டம்

சட்ட விரோதமாக சாராயம், கசிப்பு, கள், கஞ்சா முதலியவற்றை விற்பனை செய்த குற்றத்துக்காகச் சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 314 பேர் மது வரித் திணைக்கள அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் சட்டவிரோத பியர் விற்பனையில் 4 பேரும், சாராய வடிப்பில் ஒருவரும், கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 34 பேரும், கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களை வைத்திருந்த குற்றத்துக்காக ஒருவரும், சட்டவிரோதமாக சாராயத்தை கொண்டு சென்ற குற்றத்துக்காக ஒருவரும், சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்த குற்றத்துக்காக 68பேரும், கள் விற்பனை செய்த குற்றத்துக்காக 202 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றத்துக்காக 3 பேரும் அடங்குவர்.

இவர்களிடமிருந்து நீதிமன்றத்தால் மொத்தம் 6 இலட்சத்து 65 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டதாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டு 2 இலட்சத்து 53 ஆயிரத்து 130 லீற்றர் சாராயமும் 30 இலட்சத்து 97 ஆயிரத்து 111 லீற்றர் கள்ளும் நுகர்வோரால் நுகரப்பட்டுள்ளதாக மது வரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (து-133)

## நெல் அறுவடை இயந்திரம்

சுழிபுரம் கமநல சேவை திணைக்களத்துக்கு நெல் அறுவடை செய்யும் புதிய இயந்திரமொன்று கிடைத்துள்ளது.

இந்த இயந்திர மூலம் நெல் அறுவடை செய்வதற்கு பரப்புக்கு ரூபா 250 கூலியாகத் திணைக்களத்தால் அறவிடப்படுகின்றது.

நெல் அறுவடை செய்வதற்குக் கூலியாட்களுக்குத் தட்டுப்பாடான இந்த நேரத்தில் இந்த அறுவடை இயந்திரம் கிடைக்கப் பெற்றது. மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. (து)

# எஸ்.பி திஸநாயக்க விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றில் மேல் முறையீடு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிரான லஞ்ச ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பியசன ரணசிங்க உயர் நீதிமன்றில் இம் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் தாக்கல் செய்துள்ள மனுவில், சுமார் 32 மில்லியன் ரூபா லஞ்ச ஊழல் மோசடிக் குற்றச்சாட்டிலிருந்து எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிப்பதாக கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தவறானது.

அத்தீர்ப்பை சரியானதென மேல்முறையீடு நீதிமன்றம் உறுதி செய்திருப்பதும் பிழையானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சட்டத்தையும் நீதியையும் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் தவறாக கையாண்டுள்ளனர் என்றும் இதனை எஸ்.பி.திஸநாயக்கவை விடுவித்தது தவறானது என்று தலைமை நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இல்ல மெய் வல்லுநர் போட்டி

(நல்லூர்)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதமவிருந்தினராக டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க திட்ட ஆலோசகர் செல்வி.எரிக்கரினும், விசேட விருந்தினராக கோப்பாய் கல்வி கோட்ட பணிப்பாளர் எஸ்.சிவஞானசுந்தரமும், சிறப்பு விருந்தினராக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலிகிழக்குப் பிரிவின் செயலாளர் இ.மயில்வாகனமும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (க-134)

* * *

(நல்லூர்)

மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை வித்தியாலய அதிபர் க.பேரின்பநாதன் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பிரதம விருந்தினராக முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சக்திவேல் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (க-134)

* * *

(மருதங்கேணி)

மருதங்கேணி உடுத்துறை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2.00 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் சா.அரியகுமார் தலைமையில் நடைபெறும்.

இங்கு பிரதமவிருந்தினராக பருத்தித்துறை - மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி மா.இரகுநாதன் கலந்துகொள்வார். (க-35)

## நியமனம்

# ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள்

கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் தம்புள்ள அமயா லேக் ஹொட்டலில் ஊடகவியலாளர்களுக்கான அனர்த்த முகாமைத்துவக் கருத்தரங்கும் அனர்த்தத்தின்போது ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் என்பவை சம்பந்தமாகவும் பயிலரங்கம் ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

சர்வதேச செய்திப் பாதுகாப்பு கற்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஊடக உதவி மையம், முரண்பாடுகளுக்கான கற்கை மேற்கோள் நிறுவனம், திறந்த சமூக நிறுவனம் என்பவற்றின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சிகள் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டன.

நாட்டில் உள்ள சகல ஊடகவியலாளர்களுக்கும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேற்படி பயிலரங்கில் லண்டன் சர்வதேச ஊடக உதவி மன்ற ஹத்தர் அலன் பயிலரங்க நெறிகளை நடத்தினார்.

இந்த இரண்டுநாள் பயிற்சி பயிலரங்கு முடிவில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சங்கானை அரச இயந்திர மட்கல நிலையத்தில் களிமண் உருவ வடிவமைப்புப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களத்தால் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் இந்த மட்கல நிலையத்தில் அச்சுகள் மூலம் களிமண்ணால் உருவங்களை வடிவமைக்கும் பயிற்சியும், அதற்குரிய வர்ணங்களைத் தீட்டுவதற்கான பயிற்சியும் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பயிற்சிகளைப் பெறவிரும்புபவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி அ.திருச்செல்வத்திடம் தமது விண்ணப்பங்களை நேரிலோ அல்லது கடிதமூலமோ சமர்பிக்குமாறு வலி. மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக நாளொன்றுக்கு 100 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-7)

# ஒட்டகப் பாலில் தயார் செய்த அழகுகிரீம் விரைவில் விற்பனை

பெண்களின் முகம் புதிய பொலிவு பெற ஒட்டகம் உதவப் போகிறது. எவ்வாறெனில் ராஜஸ்தான் மாநிலத்தில் தற்போது ஒட்டகப் பாலில் இருந்து முகத்தில் பூசப்படும் 'சிகப்பழகு கிரீம்' தயாரிக்கப்பட்டுள்ளது.

நாளுக்குநாள் புதுப்புது மாற்றங்கள் வெளிப்படும் நவீன உலகில் நவநாகரிக பிரியர்கள் தங்களின் உடல் அழகை மேம்படுத்த தனி கவனம் செலுத்தி வருகின்றனர். அதிலும் குறிப்பாக முக அழகிற்கு பெண்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்வதை யாராலும் மறுக்க முடியாது.

தற்போது பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் இந்த லிஸ்டில் சேர்ந்துவிட்டனர். இதனை உணர்ந்த அழகுசாதன நிறு ... நாம் கண்டுள்ளோம்.

ஆனால் தற்போது சற்று வித்தியாசமாக ஒட்டக பாலில் இருந்து 'சிகப்பழகு கிரீம்' தயாரிக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பிகானீர் தேசிய ஒட்டக வளர்ப்புப் பண்ணை விஞ்ஞானிகள் இந்த ஒட்டக பால் கிரீமை தாயரித்துள்ளனர். பண்ணையின் இயக்குனர் மன்மோகன் இது பற்றிக் கூறுகையில்,

"ஒட்டகப் பாலில் ஆறு வகையான கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இந்த அமிலங்கள், முகத்திற்கு புது பொலிவை தரும் குணங்கள் கொண்டவை. தற்போது 70 மற்றும் 100 கிராம் அளவுடைய 'பேக்'களில் 'சிகப்பழகு கிரீம்கள்' தயாரித்து வரு

## வெளிக் கதவு திருட்டு

(ஊர்காவற்றுறை)

மண்குழி வீதியிலுள்ள வீடொன்றில் அண்மையில் வெளிக்கதவைத் (கேற்றை) திருடியவரை பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

இந்நபர் வெளிக்கதவை களவாடிச் சென்ற போது பக்கத்து வீட்டர் கண்காணி

## நியமனம்

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்துக்கான சமூக சேவை அலுவலராக, பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றி வந்த என்.இராஜலிங்கம் சமூக சேவைகள் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (க-134)

இதனை உணர்ந்த அழகுசாதன நிறுவனங்கள், ஆண்களுக்கான சிகப்பழகு கிரீம்களை வெளியிட்டு வருகின்றன.

பெண்கள் மற்றும் ஆண்களுக்காக தயாரிக்கப்படும் இந்த சிகப்பழகு கிரீம்கள் குங்குமப்பூ, ஆலா வேரா (கற்றாழை) போன்ற பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படுவதாக ரி.வி விளம்பரங்களை

70 மற்றும் 100 கிராம் அளவுடைய 'பேக்'களில் 'சிகப்பழகு கிரீம்கள்' தயாரித்து வருகிறோம். இந்த கிரீம்கள் மிகவிரைவில் சந்தையில் வெளியிடப்படும்'' என்றார்.


ஒட்டகப் பாலில் இருந்து தயாரிக்கப்பட்ட ஐஸ் கிறீம்கள் பிளேவர் மில்க் ஆகிய உணவு பொருட்கள் ஏற்கனவே விற்பனைக்கு வந்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

இந்நபர் வெளிக்கதவை களவாடிச் சென்ற போது பக்கத்து வீட்டார் கண்காணித்துவிட்டனர்.

இதனையடுத்து பொலிஸாருக்கு அவர்கள் உடனடியாக அறிவித்தனர்.

பொலிஸார் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் வைத்து குறித்த நபரை மடக்கிப் பிடித்து வெளிக்கதவையும் உரியவரிடம் ஒப்படைத்தனர். (க-72)












யாழ்.மாவட்டத்தில் இயங்கும் இலங்கை வங்கி கிளைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.இலங்கை வங்கி மேற்றரக் கிளையில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற போது இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட ஊழியர் விளையாட்டுக் கழகத்தலைவர் கே.பாலசுப்பிரமணியம், செயலாளர் என்.சிவரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதையும் கௌரவிக்கப்பட்ட வங்கி ஓய்வூதியர்களையும், நிகழ்வில் கலந்துகொண்ட இதரர்களையும் படங்களில் காணலாம்.

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

58 மீள்பார்வை



ஓவர் ஆக்டிங்கா?


இதற்கெல்லாம் நான்ஒரு பதில்கூறுகிறேன் . அத்தனை பேருக்கும் ஒரு சிறிய ஆடை போட்டு விடுங்கள் . மேக்கப் காஸ்ட்யூம் எதுவுமே இருக்கக் கூடாது. ஸ்டேஜில் வந்து நின்று கட்டப்பொம்மன் வசனத்தைப் பேசி நடிக்கச்சொல்லுங்கள். கர்னனாக நடிக்கச் சொல்லுங்கள் வ.உ. சியாக நடிக்கச் சொல்லுங்கள் . நவராத்திரி கேரக்டரில் நடிக்கச் சொல்லுங்கள் . எதுவேண்டுமானலும் நடிக்கச் சொல்லுங்கள். ஆடை அலங்காரமின்றி வெறும் முகபாவமும் பாடிலாங்கு வேஜும் (Body languaeg)காட்டி நடிக்கவேண்டும் . நடிக்கின்ற பாத்திரத்தை கண்முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவன் நடிகன் . இது எத்தனை பேரால் முடியும்?

வேறொரு உதாரணமும் சொல்கிறேன். இப்போது வீட்டில் ஒரு வேலைக்காரன் தவறு செய்து விட்டான் என்று வைத்துக்கொள்ளுங்கள் . 'டேய் நீ திருடினாயா ?' என்றால் ... இல்லீங்க என்பான். 'டேய் உண்மையைச் சொல்லுடா' என்றுமேலும் அதட்டினால் இல்லீங்க நான் திருடவே இல்லீங்க என்று அழுதுகொண்டு மேலும் பேசுவான் . அப்போது என்ன சொல்கிறோம் ? 'டேய் இந்த நடிப்பெல்லாம் வேண்டாம்... உண்மையைச் சொல்லு ...' என்று தானே கூறுகிறோம். இயற்கையாக பேசுவதை விட்டு விட்டு வேறு விதமாக செய்யும் போது தானே 'நடிப்பு' என்று நினைக்கிறீர்கள். நேச்சுரலாக மேக்க்ப் போட்டுக்கொண்டார் என்று சிலர் கூறுகிறார்கள் . அதெப்படி சார் நேச்சுரல் மேக்கப் போடுவது. தாடியில் கறுப்புப் பூசிக் கொண்டால் நேச்சுரலாகப் பூசிக் கொண்டார் என்றா கூறமுடியும்? நடிப்பு என்றாலே மிகைப்படுத்திக் காட்டும் உணர்ச்சிகள் தான் . இதில் ஒவர் , அண்டர் , நேச்சுரல் ,அன்நேச்சுரல் என்பதெல்லாம் வெறும் விதண்டாவாதம்.



ஸ்ரீவள்ளி படத்தில் முருகனாக... (1961)

வேறு ஒரு உதாரணம் சொல்லுகிறேன் ... அம்மா இறந்து விட்டார் என்று ஒரு காட்சி வருகிறது . அதற்கு அ..ம்..மா.. என்று உரக்கக் கூறித்தானே அழ வேண்டும் . அப்படித்தானே கூறி வீட்டில் அழுவார்கள் . அம்மா என்று மெல்லிய குரலில் கூறி முகத்தை முடிக்கொண்டால் அதற்குப் பெயர் நடிப்பா ? நன்றாக நடிக்கத் தெரியாத நடிகர்களை டைரக்டர்களே கண்டு கொள்வார்கள். அந்த நடிகர்களிடம் நீங்கள் முகத்தை மூடிக் கொண்டு முதுகைக் கேமராவுக்குக் காட்டிவிடுங்கள் என்று கூறிவிடுவார்கள். ஒருவருக்கு நடிக்கத் தெரியாது என்றால் அதற்கு தக்கபடி கேமரா ஆங்கிள் மாற்றி ஷாட் வைத்து விடுவார்கள்.



திருவிளையாடல் படத்தில் சிவனாக...(1965)

நான் நடிக்கிறேன் . கேமரா என்னையே பார்க்கிறது. நான் அதிக குளோசப்பில் காட்டப்படுகிறேன். அதனால் ஓவர் ஆக்டிங் என்று விமர்சிக்கிறார்கள் . மெத்தட் ஆக்டிங் என்பது வெறும் தியரி தான்.

அம்மா இறந்துபோன காட்சியில் அம்மா இறந்து கொஞ்ச நேரம் கழித்து அம்மா இறந்து விட்டாயா? என்று கேட்பார் நடிகர் . இது மெத்தட் ஆக்டிங் . இது ட்யூப்டைலட் போல.

அம்மா இறந்து விட்டாள் என்று கூறியவுடனே ஐயோ அம்மா இறந்து விட்டாயா என்று பதற வேண்டும் , கதற வேண்டும் . அது தான் ஜனரஞ்சகமான நடிப்பு. அதுதான் ஆக்டிங்.

ஒருசிலர் விமர்சிக்கிறார்களே என்று ஒரு படத்தில் மிகவும் அமைதியாக நடித்துப் பார்த்தேன் . வசனங்களைச் சற்றுக் குறைந்த ஸ்தாயியில் பேசினேன். என்னடா இந்தப்படத்தில் சிவாஜி நன்றாக நடிக்கவில்லையே என்கிறார்கள் .

உயிரைக் கொடுத்து நடித்தால் ஓவர்ஆக்டிங் என்கிறார்கள். கொஞ்சம் சாது போல நடித்தால் இந்தப் படத்தில் சிவாஜி நடிக்கவில்லையே என்கிறார்கள். இதற்கெல்லாம் முடிவே கிடையாது . எனவே நமக்கு நமது வாத்தியார் என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறாரோ நம்முடைய கற்பனைக்கும் திறமைக்கும் என்ன வருகிறதோ மக்கள் எதை எம்மிடம் எதிர் பார்க்கிறார்களோ அது போல நடிக்க வேண்டும் . அது தான் எனக்குத் தெரியும். அதுதான் எல்லோருக்கும் பிடிக்கும் . டி.எஸ்.என்: நாடகங்களிலும் சரி திரைப்படங்களிலும் சரி உங்கள் சாதனைகளுக்கு முக்கிய காரணங்கள் எவை?



மூன்று தெய்வங்கள் படத்தில் விஷ்னுவாக... (1971)

சிவாஜி: நான் நடிப்பது 100-வது நடகமாயிருந்தாலும் சரி 100-வது படமாகயிருந்தாலும் சரி இன்று தான் என் முதல் நாடகம் நடக்கிறது . இன்றுதான் என் முதல்படம் வெளிவருகிறது .என்ற எண்ணத்தோடு என் வேலையை சிரத்தையாக செய்கிறேன். இதுதான் என் சாதனையின் இரகசியம்.

நாடகத்தில் சென்று, நின்று இரண்டு மூன்று காட்சிகளில் வசனத்தைப்பேசி நடித்து , மக்களை என் பக்கம் இழுக்கும்வரையில் வேறு எதைப்பற்றியும் என்கவனம் போகாது. ஒரு நாடகமென்றால் லைட், மைக், சீன், செட் போன்றவைகளைக் கவனிக்கவேண்டும். திடிரென்று ஒரு நடிகன் வரவில்லையென்றால் புது ஆளைப்போட வேண்டி வரும் . அவனுக்குச் சொல்லிக்கொடுத்து, தட்டிக் கொடுத்து, சப்போர்ட் செய்து அழைத்துச் செல்லவேண்டும் . இவையெல்லாம் மக்களுக்குத் தெரியக்கூடாது. அதனால், ஒவ்வொரு நாடகம் நடிக்கும் போதும் அது புது நாடகம் போல் எண்ணித்தான் நடித்தேன். இது பழைய நாடகம்தான் எனக்குப் பழகிவிட்டதுஎன்றெல்லாம் அசிரத்தையாக இருக்க மாட்டேன். இன்று வரை அதுபோலத்தான் நடித்துக்கொண்டிருக்கிறேன். இது தான் என் நாடகங்களின் வெற்றிக்குக்காரணம்.

(தொடரும்)

நுவரெலியா, வலப்பனை பிரதேச சபைகளில்

# புதிய ஜனநாயகக் கட்சி இலக்கம் 1இல் போட்டியிடும்

(தெகிவளை)

மலையகத்தின் நுவரெலியா , வலப்பனை ஆகிய பிரதேச சபைகளுக்கு புதிய ஜனநாயக கட்சி சுயேட்சைக் குழு இலக்கம் 1இல் போட்டியிடுகின்றது.

அதன் சின்னம் மெழுகுவர்த்தியாகும். கட்சியின் மலையகப் பிரதேசச் செயலாளர் ச. பன்னீர்ச்செல்வம் தலைமையில் வலப்பனை பிரதேச சபைக்கும் மலையக பிரதேசக் குழுவின் உறுப்பினர் டி.கே. சுதர்சன் தலைமையில் நுவரெலியா பிரதேச சபைக்கும் போட்டியிடுகின்றது.

மலையகத் தோட்டப் பகுதிகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உள்ளூராட்சி சபைகளுக்கு ஊடாக முன் நிறுத்தி முடிந்தளவு தீர்வு காண்பதற்கும் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான நிலம், வீடு, வேலைவாய்ப்பு , கல்வி , சுகாதாரம் போன்றவற்றுக்கான கோரிக்கைகளுக்காக அரசியல் ரீதியில் மக்களை விழிப்படையச் செய்து வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுக்கவும் இத்தேர்தலை பயன்படுத்தும் அடிப்படையிலேயே கட்சி மேற்படி தேர்தல்களில் பங்கு கொள்கின்றது.

அதேநேரம் வடக்கு -கிழக்கில் ஜனநாயக சூழலோ மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க கூடிய நிலைமைகளோ இல்லை என்பதால் கட்சி அங்கு போட்டியிடவில்லை.

(க)

# விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கு ஜப்பான் உபகரணங்கள் வழங்கி உதவி

(கொழும்பு)

இலங்கையின் விவசாயத்துறையை மேம்படுத்த ஜப்பான் அரசாங்கம் 30 கோடி ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்களில் 4 சில்லு டிராக்டர் வண்டிகள் 14, 2 சில்லு டிராக்டர் வண்டிகள் 100, பல்நோக்கு அறுவடை இயந்திரங்கள் 5 என்பன அடங்குகின்றன.

மஹிந்த சிந்தனைகள் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கும் ஹட்டட்ட அறும் என்ற வேலைத் திட்டத்தை வினைத்திறன் மிக்க முறையில் அமுல் செய்து விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஜப்பான் வழங்கிய உபகரணங்களை கூலிக்குப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்குமென அமைச்சர் சமால் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இன்று விவசாய அமைச்சின் வளாகத்தில் நடை பெறும் வைபவத்தில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அக்கியோச்சூடா, அமைச்சர்களான சமால் ராஜபக்ஷ, எஸ். எம்.சந்திரசேனா ஆகியோரிடம் உபகரணத் தொகுதிகளை கையளிப்பார்.

இந்த உபகரணங்கள் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றிடம் கையளிக்கப்படும்.

(க-7)

# ஆங்கில டிப்ளோமா பரீட்சை மார்ச் 27ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவினால் நடாத்தப்படும் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா (டி. இ.ரி.இ.) இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் 27ஆம் திகதி நடை பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் உரியவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிப்போர் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று மார்ச் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும்.

பரீட்சார்த்திகள் தமது ஒப்படைகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என ஆங்கில மொழிக் கற்பித்தல் துறைத் தலை வர் அறிவித்துள்ளார்.

(க-9)

# பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை மார்ச் மாதம் 3,4 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வில்லியம் காவே, 37, கண்டி வீதியில் தினமும் காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடாத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறைக்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் செஞ்சிலுவைப் பிரிவுக் கிளைகளில் உள்ள ஒவ்வொரு தொண்டர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

(க-134,9)

# தீ விபத்து

(கொழும்பு)

புறக்கோட்டை செட்டியார் தெருவில் நேற்று முன்தினம் அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் பல விற்பனை நிலையங்கள் சாம்பலாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீதியிலுள்ள அச்சகமொன்றில் திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. இதனையடுத்து அச்சகத்தை அண்மித்த பல கட்டடங்களுக்கும் தீ பரவியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துறைமுக தீயணைப்புப் படையினரும் இலங்கை விமானப் படையினரும் இணைந்து பொது மக்களின் உதவியுடன் தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

உயிர்ச்சேத மேதும் ஏற்படாத போதிலும் பெரியளவில் பொருட் சேதமேற்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தீ விபத்துக்கானகாரணம் இதுவரை கண்டறியப்பட் வில்லை.

(க-7)

# நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைக் காவலர் களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் சனி , ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கான அறிவித்தல்கள் கடித மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித் துள்ளார்.

(க-9)

# பிலிப்பைன்சில் மண்ணில் புதையுண்ட பள்ளி

## யாரும் பிழைக்க வாய்ப்பில்லையாம்

(பிலிப்பைன்ஸ்)

பிலிப்பைன்சில் கிராம பள்ளிக்கூடம் ஒட்டுமொத்தமாக புதைந்துபோன இடத்தில் பல்வேறு நூதன சோதனைகள் நடத்தியும், யாரும் உயிரோடு இருக்கின்றனரா என்பது குறித்து அறிய முடியவில்லை. இதனால் பள்ளிக்கூடத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

பிலிப்பைன்சில் கடந்த வாரம் ஏற்பட்ட பெரும் நிலச்சரிவில் 35 மீற்றர் உயரத்துக்கு மண்ணில் புதைந்த பள்ளிக்கூடம் ஒன்றில் இருந்து அபாயக்குரல் எழுந்ததாக மீட்புக் குழுவினர் கூறியதை அடுத்து, அதை உறுதிப்படுத்த அமெரிக்க கடற்படையினர் நூதன கருவிகளைக் கொண்டு ஆய்வு நடத்தினர்.

புதைபாடுகளில் சிக்கியுள்ளவர்களின் சத்தமா அல்லது நிலச்சரிவுக்கு பிறகு பூமிக்குள் ஏற்படும் மாற்றங்களின் சத்தமா என்பதை துல்லியமாக அறிய பூகம்ப அதிர்வுகளை பதிவு செய்யும் நவீன கருவிகள் மூலம் ஒருநாள் முழுவதும் சோதனை நடத்தப்பட்டது.

250க்கும் மேற்பட்டவர்களோடு மண்ணில் புதைந்துவிட்ட அந்தப் பள்ளிக்கூட பகுதியில் இருந்து மனித உடல் அதிர்வுகள் மற்றும் உஷ்ணம் வெளிப்படுகிறதா என்பது குறித்து அமெரிக்க கடற்படை கப்டன் மார்க் பொலிசெலி தலைமையில் சர்வதேச தொழில்நுட்ப ஆய்வுக் குழுவினர் பல்வேறு சோதனைகள் நடத்தினர்.

மீண்டும் கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து கடந்த திங்கட்கிழமையன்று ஆய்வுக் குழுவினர் அங்கிருந்து திரும்பினர். சோதனையில் பள்ளி புதைந்து போயுள்ள இடத்தில் யாரும் உயிரோடு இருப்பதாகத் தெரியவில்லை.

எனினும், அமெரிக்க மற்றும் மலேசிய குழுவினர் சில குறிப்பிடத்தக்க அதிர்வுகளை பதிவு செய்துள்ளதாகக் கூறி நம்பிக்கையுடன் உள்ளனர். பெரிய அளவில் மண் புதைந்திருப்பது மற்றும் தொடர்மழை போன்ற காரணங்களால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டு வருகிறது.

கின்சாவ்கன் கிராமம் முழுவதிலும் சம்பவம் நடந்து சில மணி நேரத்திற்கு பிறகு இதுவரை ஒருவரையும் உயிரோடு மீட்க முடியவில்லை. இதனால் ஆயிரத்திற்கும் அதிகமானோர் இறந்திருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. திடீர் திடீரென மழை பெய்வதால் சடலங்களை மீட்டெடுப்பதே பெறும் பிரச்சினையாக இருந்து வருகிறது. (க)

உலக தரிசனம்

# 11 தீவிரவாதிகளுக்கு தூக்குத் தண்டனை

## பாகிஸ்தானில் சம்பவம்

பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் 2004 ஆம் ஆண்டு தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். இதில் இராணுவத் தளபதி உட்பட 10 பேர் பலியானார்கள். இதில் ஜுந்துலா என்ற தீவிரவாத அமைப்பு சம்பந்தப்பட்டு இருப்பது தெரிய வந்தது.

இவர்கள் பின்லேடனின் அல்கொய்தாவுடன் தொடர்பு வைத்து இருந்தனர் என்ற சந்தேகத்தில் பொலிஸார் அவர்களை கைது செய்தனர்.

இந்த வழக்கு கராச்சியில் உள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் நேற்று முன்தினம் நடந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி 11 தீவிரவாதிகளுக்கும் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார்.

தீவிரவாதிகளில் சிலர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். தீர்ப்பு நடந்த நீதிமன்றப் பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

இதற்கிடையே பாகிஸ்தானில் பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கும் ஆங்கூர் அதா என்ற இடத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் தீவிரவாதிகள் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தினார்கள்.

பள்ளிக்கூடம் மூடப்பட்டிருந்ததால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தி இருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது. (க)

# பிரேசிலில் மனித எலும்புக்கூட்டுப் புதையல்

(ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் உள்ள ரியோ- டி- ஜெனிரோ நகர் அருகில் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்ட இடத்தில் ஏராளமான பிளாஸ்டிக் பைகள் கிடந்தன. இதனை

இந்த உடல்கள் சுடுகாட்டிற்கு கொண்டு வரப்பட்டு இருக்கலாம் என்றும் அதை புதைக்காமல் அப்படியே போட்டு விட்டு சென்று இருக்கலாம் என்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.



வங்களாதேசம் டாக்கா பல்கலைக்கழகத்தில் சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டது. அப்போது மாணவிகள் இராட்சத மலர் கோலம் போட்ட காட்சி.

## ஈராக், ஆப்கானிஸ்தானில்

# 100 கைதிகளைக் கொன்ற அமெரிக்க இராணுவம்

(வோஷிங்டன்)

ஈராக், ஆப்கானிஸ்தானில் பிடிபடும் கைதிகளை அமெரிக்கா மிக மோசமாக கொடுமைப்படுத்துவதாகவும் அவர்களில் பலர் உயிர் இழந்துவிட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புகைப்பட ஆதாரங்களுடன் சீசெய்தி வெளிவந்தது. இங்கு பிடிபடும் கைதிகளை கியூபா அருகே உள்ள குவாண்டனாமோ மற்றும் ஆப்கானிஸ்தானில் உள்ள இரகசிய சிறைக்கு கொண்டு சென்று கொடுமைப்படுத்துவதாக கூறப்பட்டது.

இதை மனித உரிமை அமைப்பும் இப்போது உறுதி செய்துள்ளது. இது சம்பந்தமாக மனித உரிமை அமைப்பு ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறது. அதில் கூறியிருப்பதாவது,

2002ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆப்கானிஸ்தான், ஈராக்கில் பிடிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகள் சிறைக் காவலிலேயே இறந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.100 பேர் இறந்தது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. அதில் 34 பேர் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றுள்ளது.

இது தொடர்பாக மனித உரிமை அமைப்பின் பிரதிநிதி தெபரோ பெர்லஸ்டின் கூறும்போது, 'நாங்கள் கொடுத்துள்ள தகவல்கள் அனைத்தும் ஆதாரபூர்வமானவை' என்று கூறினார்.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகனில் இருந்து மறுப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் 'இது தவறான தகவல். இந்தக் குற்றச்சாட்டை முக்கியமான விஷயமாக நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். எனவே இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும்' என்று கூறப்பட்டுள்ளது. (க)

# பல்கேரியாவில் நிலநடுக்கம்

(சோபியா)

பல்கேரியா நாட்டின் தெற்குப் பகுதியில் இருக்கும் கார்ட்ஹாலி நகர் அருகில் மையம் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 4.2 றிக்டர் அளவில் பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

என்றாலும் கட்டடங்கள் அதிர்ந்தன. சுவர்களில் வெடிப்புகள் ஏற்பட்டன. மாடி வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கின.

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிக்கு ஓடி வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# வேறு நட்சத்திரங்களில் மனிதர்கள் வசிக்கிறார்களா?

நமது சூரிய குடும்பத்தைப் போல் வேறு நட்சத்திர குடும்பங்களிலும் மனிதர்கள்


பது போன்ற தன்மை கொண்ட 5 புதிய நட்சத்திரங்களை கண்டறிந்துள்ளனர்.

பிரேசில் நாட்டில் உள்ள ரியோ- டி-ஜெனிரோ நகர் அருகில் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்ட இடத்தில் ஏராளமான பிளாஸ்டிக் பைகள் கிடந்தன. இதனை பொலிஸார் சோதனையிட்டபோது அவற்றில் சுமார் 100 மனித எலும்புக்கூடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் அவை 2 வயது முதல் 3 வயதுடைய குழந்தைகளின் எலும்புக் கூடுகளாக இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

வரப்பட்டு இருக்கலாம் என்றும் அதை புதைக்காமல் அப்படியே போட்டு விட்டு சென்று இருக்கலாம் என்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் ஒரே இடத்தில் கிடைத்திருப்பது அந்த நாட்டில் இதுவே முதல் முறை என்று கூறும் பொலிஸார் இது குறித்த விசாரணைகளை தாம் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (க)



ஜப்பான் ஒரே மாதத்தில் 3ஆவது செயற்கைக் கோளை விண்ணில் ஏவியுள்ளது. எம்- 5 என்ற இந்த ரொக்கெட் செயற்கைக் கோளை சுமந்தபடி விண்ணில் பாய்ந்தது.

விண்வெளி மற்றும் பூமியை படம் எடுத்து ஆராய்வதற்காக இதை ஏவியுள்ளனர்.

## மனிதர்கள் வசிக்கிறார்களா?

நமது சூரிய குடும்பத்தைப் போல் வேறு நட்சத்திர குடும்பங்களிலும் மனிதர்கள் வசிக்கிறார்களா? என்ற ஆய்வில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க வானவியல் அறிஞர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியில் நாம் வசிப்பது போன்ற தன்மை கொண்ட 5 புதிய நட்சத்திரங்களை கண்டறிந்துள்ளனர்.

பால் வெளிப்பாதையில் அமைந்துள்ள அந்த நட்சத்திரங்களை நோக்கி, 'ரேடியோ சிக்னல்'கள் அனுப்பும் பணியில் அவர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர். (க)

## ஒரே இருதயத்துடன் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தை மரணம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இருந்து உயிர் தப்பிய ஷசியா என்ற கர்ப்பிணிப் பெண் முஸபராபாத் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு கடந்த சனிக்கிழமை 3 குழந்தை பிறந்தது. ஒன்று ஆண் குழந்தை. மற்ற இரு பெண் குழந்தை ஒன்றுடன் ஒன்று ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளாகும். ஆண் குழந்தை நல்ல உடல் நலத்துடன் இருந்தது.

ஆனால் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரே ஒரு இருதயம் மட்டுமே இருந்ததால் அதனை இஸ்லாமாபாத்தில் உள்ள மருத்துவ ஆராய்ச்சிக் கழக ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து டாக்டர்கள் சிகிச்சை அளித்தார்கள்.

என்றாலும் டாக்டர்கள் முயற்சி பலன் தரவில்லை.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி அளவில் ஒரு குழந்தையின் உயிர் பிரிந்தது. மற்றொரு குழந்தை இரவு 10 மணி அளிவில் மரணம் அடைந்தது.

இந்தச் சம்பவம் பற்றி மருத்துவமனை டாக்டர் அக்தர் கூறுகையில்,

அந்த இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரே ஒரு இருதயம் இருந்ததால் உயிர் வாழப் போதுமானதாக இல்லை.

மேலும் சத்திரசிகிச்சை செய்து பிரிக்கும் நிலையிலும் அக்குழந்தைகள் இல்லை என்று தெரிவித்தார். (க)

### ஹோட்டலில் குண்டு வெடிப்பு

(மொசூல்)

ஈராக் நாட்டின் வடபகுதியில் உள்ள மொசூல் நகரில் உள்ள ஹோட்டலில் நேற்று குண்டு வெடித்தது. இதில் பொலிஸ்காரர் உட்பட 5 பேர் பலியானார்கள். மேலும் 21 பேர் படுகாயம் அடைந்தார்கள்.

இந்த வெடிகுண்டு தாக்குதலை அல் கொய்தா தொடர்புடைய முஜகிதீன் தீவிரவாத இயக்கம் நடத்தியதாக கூறப்படுகிறது. ஆனால் இதுபற்றி ஈராக் அதிகாரிகள் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. (க)

ஆபத்தைக் கண்டு அஞ்சாதீர்கள்! ஆபத்தைச் சமாளிக்க வழி என்ன என்று முடிவு கண்டு நிவர்த்திக்க முயற்சி செய்யுங்கள்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# பறவைக் காய்ச்சல் பயங்கரம் தடுப்பு நடவடிக்கைகள் அவசியம்

பறவைக் காய்ச்சல் பயங்கரம், உலகம் முழுவதையும் உலுப்பி வருகின்றது.

ஒவ்வொரு நாடும் பறவைக் காய்ச்சல் பரவுகையில் இருந்து தம்மைக் பாதுகாத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றன.

இந் நிலையில் அண்டை நாடான இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பரவுவகை ஏற்பட்டுள்ள தகவல் தென்கிழக்காசிய நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்தியாவில் இனம் காணப்பட்டுள்ள நோய் காரணமாக இலட்சக்கணக்கான கோழிகள் கூண்டோடு அழிக்கப்படுகின்றன.

கோழிகளுக்குப் பரவக்கூடிய பறவைக் காய்ச்சலானது அதனூடாக மனிதனுக்கும் தொற்றிக்கொள்கின்றது.

நோய்த் தொற்று ஏற்பட்டால் இறப்பு நிச்சயம் என்ற இப் பயங்கர வியாதியினால், இந்திய மக்கள் அதிர்ந்து போயுள்ளனர் கூடவே இந்திய கோழிப் பண்ணையாளர்கள் தங்கள் பொருளாதாரம் கண்முன்னே காவு கொள்ளப்படுவதை பார்த்துக் குய்யோ முறையோ என கதறுகின்றார்கள்.

இந்த அழிவுகள் இந்தியாவில்தானே என நாம் கருதிக் கொள்வோமாயின் அதன் அபாயத்தை மிக விரைவாகச் சந்திக்கவேண்டி வரும். எனவே வரும் முன்னர் காப்பதே மேலான நடவடிக்கை என்பதால் பறவைக் காய்ச்சல் நோய்த் தடைக்கான முன்னாயத்தங்களை முடுக்கிவிடுவது பொறுப்பான அமைப்புக்களின் கடமையாகும்.

அண்டை நாடான இந்தியாவில் பறவைக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டுள்ளதால் அதன் பரவுகை இலங்கையிலும் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு. பறவைக் காய்ச்சல் அபாயம் பற்றிய அறிவுரைகள் மக்களைச் சென்றடைவதற்கு முன்னதாகவே நோய்த்தொற்று இலங்கையில் ஏற்பட்டுவிடலாம்.

எனவே சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் கால்நடை மருத்துவ அமைப்புக்கள் விழிப்போடு செயற்பட வேண்டிய அவசியம் உள்ளது. அதேநேரம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு பறவைக் காய்ச்சல் நோய் பற்றிய தகவல்களை வழங்குவதன் மூலம் பறவைக் காய்ச்சல் நோய் பரவுகையை தடுக்கவும் தேவையற்ற அச்சப்பாடுகளை விலக்கவும் முடியும்.

குறிப்பாக கோழிப் பண்ணையாளர்களை பாதுகாப்பதற்குப் பறவைக் காய்ச்சல் பற்றி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சப்பாட்டை நிவர்த்தி செய்வதும் காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

# உள்ளூராட்சி சபைகளைக் கலைத்தால் பாரிய போராட்டங்கள் நடத்தப்படும்

## ஐ.தே.க. எச்சரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளை அவசர காலச்சட்டத்தின் கீழ் கலைத்தால் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில்பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய எச்சரி த்துள்ளார்.

கொழும்பு ஊடக வியலாளர்களிடம் நேற்று முன்தினம் கருஜயசூரிய இது பற்றிக் கூறுகையில் ,

அரசாங்கத்தின் அவசர காலச்சட்டத்தை மக்களின் பாதுகாப்புக்கருதியே நாம் ஆதரித்து வருகிறோம். ஆனால் அதை தவறாகப் பயன்படுத்தி உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டால் நாம் கொண்ட நம்பிக்கைக்கு அது எதிரானதாக அமையும் .

அத்துடன் உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பது என்பது சட்டவிரோதமானது. ஜனநாயகத்துக்கு விடுக்கப்படுகிற அச்சுறுத்தலாகும் .

இதேவேளை, அவசரகாலச் சட்டத்தை ஐக்கி ய தேசியக் கட்சி எதிர்க்கவில்லை. பொதுமக்களின் பாதுகாப்புக்குத் தான் இந்த அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படுவதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க உறுதியளித்திருந்தார். இதனை மஹிந்த ராஜபக் ஷவிற்கு எழுதிய தனது கடிதத்தில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார் என்றார் . (க)

# பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலை' புலிகளுக்கும் இடையில் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தினை ஏற்படுத்தும் என பொருளாதாரத்துறை ஆய்வாளர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு லங்கா ஓரிக்ஸ் நிறுவனத்தின் தலைமை ஆய்வாளரான வஜிர பிரேமவர்த்தனவே இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஜெனீவாவில் இடம்பெறவுள்ள பேச்சுக்கள் தோல்வியடைந்து இந்த நாடு போர் ஒன்றினை நோக்கிச் செல்லுமாயின் இது உண்மையில் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பிரச்சினைகளை தோற்றிவிக்கும்.

நிரந்தரமான அமைதி சமாதானம் என்பன இல்லாத பட்சத்தில் முதலீட்டாளர்கள் இங்கு குறிப்பிட்டளவு முதலீடுகளைச் செய்ய முடியாது போய்விடும். எனவே, பேச்சுக்களில் ஓர் இணக்கப்பாட்டினை காணதுவிடின் பெருமளவிலான முதலீடுகளை இழந்தவர்களாக ஆகிவிடுவோம்.

தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரலை அவர்கள் வகுத்துக்கொள்ள வேண்டும். அதுவே சிறந்த பலனைத்தரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு)

# 7 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

தூத்துக்குடியிலிருந்து கடல்வழியாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 7 கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மா லை சென்னை போதைப் பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே ஹெரேர்யின் போதைப் பொருள் கைப்பற்றப் பட்டது. இது தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சம்பவ தினத்தன்று தூத்துக்குடிக்கு வந்த பொலிஸார் கடலோர காவல் படையுடன் சேர்ந்து கூட்டு ரோந்திலும் ஈடுபட்டனர் .

இது பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த திங்கட்கிழமை தூத்துக் குடி கடல் பகுதியில் வேகமாக சென்ற ஒரு படகை நிறுத்தி சென்னைப் பொலிஸார் சோதனையிட்டனர்.

அதிலிருந்து ஏழு கிலோ எடைகொண்ட ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது . அதன் மதிப்பு 7கோடியாகும் . தூத்துக்குடியிலிருந்து கடல் வழியாக ஹெரோயினை இலங்கைக்கு கடத்திச் செல்லவிருந்ததாக படகிலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இதே வேளை, போதைப்பொருளைக் கடத்தி வந்தவர்களுக்கும் சர்வதேச போதை ப்பொருள் கடத்தல் கும்பலுக் கும் தொடர்புண்டா? ஹெரோ யின் எங்கிருந்து தூத்துக் குடிக்கு கொண்டு வரப்பட்டது என்பன குறித்து விசாரித்து வருவதாக பொலிஸார் தெரிவி த்தனர். (க-9)

# மராட்டியத்தில் பறவைக்காய்ச்சல் மேலும் 8 பேரைத் தாக்கியது!

(புதுடில்லி)

மராட்டியம் குஜராத் மாநிலங்களில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கி ஆயிரக் கணக்கான கோழிகள் உயிரிழந்தன .

இதையடுத்து அனைத்து மாநிலங்களிலும் முன் எச்சரிக்கையாக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பறவைக் காய்ச்சல் நோய் தாக்கிய் அறிகுறியுடன் மராட்டிய மாநிலம் நவபூர் பகுதியில் ஏற்கனவே பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்ப ட்டனர்.

அவர்களில் 3 பேர் மட்டும் தற்போது சிகிச்சை பெற்று வருகிறாக்கள் . அதன்பிறகு மேலும் 8 பேர் நவபூர் மருத்து வமனையில் பறவைக்காய்ச்ச ல் அறிகுறியுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ள்ளனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மராட்டியத்தில் பறவைக்காய்ச்சல் நோய் பரவியதைத் தொடர்ந்து மத்திய அரசு அவசர ஆலோசனை நடத்தியது. மந்திரிசபை செயலாளர் பி.கே.சதுர்வேதி தலைமையில் நடந்த கூட்டத் தில் முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டன.

அதன்படி மராட்டியத்தில் பறவைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதியில் 3முதல் 10 கீலோ மீற்றர் சுற்றளவில் இருக்கும் பண்ணைகளில் கோழிகளுக்கு தடுப்பூசி போ டக் கூடாது. தடுப்பூசி போடுவதை உடனே நிறுத்த வேண்டும் .

அந்த கோழிகள் மூலம் நோய் பரவும் அபாயம் இருப்பதால் அவற்றை முழுமையாக அழிக்க வேண்டும் என்று பண்ணையாளருக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது . இதற்காக அவர்களுக்கு 5 நாள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்குள் அவர்கள் கோழிகளை அழித்து விட வேண்டும்.

அத்துடன் மத்திய சுகாதாரத் துறை ,சுற்றுச் சூழல்வனத் துறை மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை, வேளாண்மை ஆராய்ச்சி சபை ஆகிய வற் றின் விஞ்ஞானிகள் ,நிபு ணர்கள் அடங்கிய குழுவினருக்கும் இது தொடர்பாக ஆய்வு நடத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. (க)

# ரத்வத்தை மீதான வழக்கு விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மீதான ஊழல் குற்றச்சாட்டு வழக்கின் விசார ணை கொழும்பு உயர் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணையின் போது ரத்வத்தை நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சட்ட விரோதமாக ரூபா 45 மில்லியன் வசூலித்ததாகவும் அந்தத் தொகைக்கான கணக்கை ரத்வத்தை காட்டவில்லை என்றும் லஞ்சஊழல் ஆணையம் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்திருந்தது .

இந்த வ்ழக்கின் விசாரணை கடந்த நவம்பர் மாதம் தொடங்கிய போது ஜனாதிபதி தேர்தலைக் காரணம் காட்டி வழக்கை ஒத்திவைக் க ரத்வத்தை தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது .

அதன் பின்னர் மீண்டும் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

ரத்வத்தையின் சார்பில் அர்சேகுலரட்ண முன்னிலையானார். வழக்கின்அடுத்த விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அந்த விசாரணையின் போது ரத்வத்தை நீதிமன்றில் அஜராக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. (க)

# புதிய காப்பரண்கள் அமைப்பு

(வல்வெட்டித்துறை)

வல்லை இராணுவமுகாம் பகுதியில் பல இடங்களில் இராணுவத்தினரால் புதிது புதிதாக காப்பரண்களும் பாலத்தின் இருமருங்கிலும் நீரினுள் முள் வேலிஅமைக்கப்பட்டு முகாம் பலப்படுத்தப்படுவதாக த் தெரிகிறது.


இத்தகை ய முள்வேலியால் நன்னீர் மீன்பிடித்தொழில் பாதி க்கப்பட்டுள்ளதாக அத் தொழி லில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கிறார்கள். (து-32)




# சாயி அருளமுதம்

சத் சங்கத்தில் இருப்பதனாலோ அல்லது தனிமையான ஒரு இடத்தில் இருந்து கொண்டு தியானம் போன்றவற்றில் ஈடுபடுவதனாலோ மனிதன் ஞானத்தின் இனிமையைப் பெற்றுக்கொள்ள முடியும். எவ்விதமாக பெறப்படுவதாயினும் அந்த இனிமை வெளியில் இருந்து உட்செலுத்தப் படக்கூடியதொன்றல்ல அது உள்ளே இருந்தே வளர வேண்டும். உள்ளே இருக்கும் பகைவருடன் போர் புரிந்து வெற்றியீட்டுவதன் மூலம் உள்ளே இருக்கும் இயல்பை மாற்றுவதே அதுவாகும்.







அரச பிரதிநிதிகளும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் நேற்று ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட் டபோது...

## கிரானில் தாக்குதல் துணைப்படைவீரர் சாவு

மட்டக்களப்புக் கிரானில் ஆயுதக் குழுவென்றுநடத்திய பதுங்கித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் துணைப் படைவீரர் ஒருவர் வீரச் சாவடைந்துள்ளார்.

கிரான் இராணுவ முகாமிலிருந்து வந்த படையினர் நேற்றுக் காலை 10.15 மணியளவில் இத் தாக்குதலை நடத்தியுள்ளதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத் தாக்குதலில் மட்டக்களப்பு சந்திவெளி திகிலிவெட்டியைச் சேர்ந்த நாராயணபிள்ளை சாந்தகுமார்(வயது-28) என்ற துணைப் படை வீரரே வீரச்சாவடைந்தவராவார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்குமிடையில் சுவிஸ்லாந்தின் ஜெனீவாவில் போர்நிறுத்த உடன்பாடு அமுலாக்கம் பற்றிய பேச்சு நேற்று ஆரம்பமாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-39)

## பாலா-நிமால் கைலாகு கொடுத்து...

நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், சுவிஸ்வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் முன்னிலையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரசுக்குழுவினரும் விடுதலைப்புலிகளின் தலைமை ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான விடுதலைப்புலிகள் குழுவினரும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அரசதரப்பும் விடுதலைப்புலிகளும் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிஸின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒல்ஸ்சிஸ்வைலர் ஆரம்ப உரையினை ஆற்றிய பின்னர் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் இப் பேச்சுவார்த்தை நடாத்தப்படுவதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

இவரின் ஆரம்ப உரைக்குப் பின்னால் அரச பிரதிநிதிக் குழுத் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் அன்ரன் பாலசிங்கமும் கைகுலுக்கிக் கொண்டனர். பின்னர் அரங்கில் கூடியிருந்த ஊடகவியலாளர்கள் வெளியேறிய பின்னர் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

இலங்கை அரச தரப்பில் அமைச்சர்களான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, றோகித போகல்லாகம, பேரியல் அஷ்ரப் உட்பட 17 பேர் கொண்ட குழுவும் விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம், காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், இளந்திரையன், கேணல் ஜெயம் உட்பட 16 பேர் கொண்ட குழுவும் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

இரு குழுவினருமே ஒரே விருந்தினர் மாளிகையில் தங்கியிருப்பதால் அதிகார பூர்வ பேச்சுவார்த்தைகளின்போது மட்டு மல்லாமல் மற்றைய நேரங்களிலும் கலந்துரையாடும் வாய்ப்பு இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான உறவுகள் சீர்குலைந்து வந்த நிலையில் ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் இலங்கையிலும், பன்நாட்டிலும் மிக ஆர்வத்துடன் கவனிக்கப்படுகின்றது என்பதில் குழுமியிருந்த பன்நாட்டு ஊடகவியலாளர்களைக் காணும் போதே தெரிந்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை இரு நாள் பேச்சுக்களின் முடிவில் இன்று சுவிஸ் நாட்டு நேரப்படி மாலை 4 மணிக்கு நடைபெறும் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் இருவரது உரைகளும் கேள்வி- பதில் பகுதிகளும் இடம்பெறக் கூடும் என்று ஜெனீவாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பேச்சுக்களின் செய்திகளை சேகரிக்க சர்வதேச ஊடகங்கள், உள்ளூர் ஊடகங்கள், சிறிலங்கா மற்றும் தமிழீழ ஊடகங்களின் பிரதிநிதிகள் பெருமளவில் ஜெனீவாவில் குவிந்துள்ளனர்.

அனைவரும் பலத்த சோதனைகளுக்கு மத்தியில் உள்ளனுமதிக்கப்பட்டனர். அத்துடன் பேச்சுக்கள் ஜெனீவாக் கோட்டைப் பிரதேச பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ச-4)

## ரணிலின் அரசினால் ஏற்படுத்தப்பட்ட...

பிரதேச ஒற்றுமைக்கும் சேதம் ஏற் படுத்தக்கூடியது. தற்போதுள்ள பிரச்சினைக்கு பேச்சுக்களின் மூலம் தீர்வுகாண இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒரு முதல்கட்ட நடவடிக்கையாக இருக்குமென்று நாம் கருதுகின்றோம்.

நாங்கள் எமது மக்களின் முழுமையான ஆதரவுடன் இங்கே ஜெனீவாவுக்கு வந்துள்ளோம். இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு என்பதை முன்வைத்து 2005 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியின் எண்ணங்களை பிரதிபலிக்கும் மகிந்த சிந்தனையானது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடிப்பேச்சுகளை நடத்துவதை வலியுறுத்துகின்றது. புலிகளின் தலைவருடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தக் கூட அவர் தயாராக இருப்பதாக அறிவித்தார்.

ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் பல நிகழ்த்தப்பட்ட போதும் ஜனாதிபதி அமைதி முயற்சிகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்தார்.

இந்தப் பொறுமையானது எமது பலவீனமல்ல. அமைதியின் மீதான எமது ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாகவும் அத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் தொடரும் நிலையில் தொடர்ந்து உயிரிழப்புகள் ஏற்படும் நிலையில் யுத்த நிறுத்தம் என்பது ஒட்டு மொத்தமாக அர்த்தமற்றதாகவே சீர்குலைந்து விடும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முன்னுரையிலேயே போர் நடவடிக்கைகளை முடிபுக்கு கொண்டு வரவேண்டும் என்றுதான் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் எமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரங்கள் அடிப்படையில் தங்களது இராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்ளவே இந்த ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியுள்ளனர்.

இத்தகைய செயற்பாட்டை விடுதலைப் புலிகள் கைவிடவேண்டுமென்று அரசாங்கம், கண்காணிப்புக்குழு, சர்வதேச சமூகம் வலியுறுத்தியபோதும் அதை அவர்கள் நிராகரித்தனர்.

இதனால் பாரிய அளவிலான யுத்தநிறுத்த ஒப்பந்த மீறல்கள் நிகழ்த்தப்பட்டு யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் நிலைக்கு வந்தது. கடந்த மாதம் வரை விடுதலைப்புலிகளினால் மொத்தம் 3519 யுத்த நிறுத்த மீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தால் 163 மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாக கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. ஆக 96 விழுக்காடு ஒப்பந்த மீறல்களை விடுதலைப்புலிகளே மேற்கொண்டுள்ளனர்.

படுகொலைகள், சிறார்படை சேர்ப்பு, கடத்தல்கள், இளைஞர்களை கடத்தல், தற்கொலை தாக்குதல்கள், படையினரைப் படுகொலை செய்தல், பொதுமக்கள், மாணவர்கள், அரசியல் பணியாளர்களை சித்திரவதை செய்தல் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல் என்கின்ற வகையில் விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த மீறல்கள் உள்ளன.

2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் பாரிய அளவிலான படுகொலைகள் நடந்தன. ஒப்பந்தத்தின் வரையறை தொடர்பில் அரசாங்கம் பாரிய அதிருப்தி கொள்கிறது.

இன்றைய பேச்சுக்கள் ஒரு புதிய தொடக்கம். இந்தப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு இலக்குகளை அடையுமென்று நம்பிக்கை கொள்கிறோம்.

வன்முறையற்ற பாதையில் உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் போர்நடவடிக்கைகள் தவிர்ந்த நிகழ்ச்சித் திட்டத்தை விடுதலைப்புலிகள் முன்னெடுக்கவேண்டுமென்றார் நிமால் சிறிபால டி சில்வா.

(ச-4,39)






## ஸ்ரீ காளிகாம்பாள் ஷக்தி ஜோதிடம்

*மெய்யன்பர்களே!*

ஸ்ரீ காளிகாம்பாள் ஷக்தி ஜோதிட சுவாமி ராஜ் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை.

01.செய்வினை பில்லி சூன்யத்தால் பாதிப்பு
02.பொறாமையினால் தொழில் பாதிப்பு
03.கணவன் மனைவி சண்டை பிரிவு
04.காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள்
05.வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம் அல்லது எப்போதும் சண்டை சச்சரவு
06.பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது
07.வெளிநாட்டுப் பயண முயற்சிகள் தடையின்றி செல்வதற்கான நல்வழிகள் செய்து தரப்படும்.
08.கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை
09.குடிகாரக் கணவன், அடங்காப்பிடாரி மனைவி
10.வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை ஜாதகம் பார்ப்பது, முகராசியைப் பார்த்து பலன் சொல்வதோடு தீர்வு காணவும்.

திகதி :-23, 24, 25, 26, 27 இருப்பார்கள்

தொடர்பு கொள்ள கைத்தொலைபேசி
சுவாமி ராஜ்
T.P: 077 9836704, 077 9836739
பார்வை நேரம்:காலை 10மணிதொடக்கம் இரவு 8 மணி வரை

AERO LANKA/ Serendib inn
இல.86, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் (C-அ-373)







## உடன் தேவை

01.ஒப்புநோக்குநர்கள் (ஆண்கள்- இரவுக் கடமை)

02.சிற்றூழியர்கள்-(தேநீர் தயாரிப்பாளர்கள் -ஆண்கள் இரவுக் கடமை)

யாழ்.நகர மையத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி
நிர்வாக உத்தியோகஸ்தர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 23.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.